Registered as a Newspaper    பக்கங்கள் 6    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

The Eelanaatham    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 5    திருவள்ளுவர் ஆண்டு 2025    சித்திரை 26 (09.5.94)    திங்கட்கிழமை    ஓசை 80

## அமோனியம் சல்பேற் பாவனையால் மண்ணின் பௌதீக அமைப்பு பாதிப்பு

அமோனியம் சல்பேற் உரம் திரும்பத்திரும்ப உபயோகிப்பதனால் மண்ணின் பௌதீக இயல்பு சீர்கெட்டுப் போகிறது இதனால் பயிர்ச் செய்கைக்கு மண் பாதகமாகிப் போய்விடுகிறது என தெரிவிக்கப்பட்டது யூரியா உரம் தடையினால் 1990 நடுப் பகுதியிலிருந்து வடபகுதி விவசாயிகள் இதற்கு பதிலாக நைதரன் கொண்ட இன்னொரு உரமான அமோனியாவை பயன்படுத்தி வருகின்றனர். இதனால் நிலத்தின் தன்மை சீர்கெட்டுப்போகிறது. தொடர்ந்து இந்த உரத்தின் விசிறலுக்கு உட்படும் நிலம் உவராகிப் போவதாகவும் சொல்லப்பட்டது. சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட சதி நடவடிக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் அகதிகளை வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்ப தமிழக அரசு முயற்சி

## ஹந்தான மலையில் தீ விபத்து

(கொழும்பு)

கண்டி ஹந்தான மலைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் திடீர் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் ஐந்து ஏக்கருக்கும் அதிகமான பிரதேசம் சேதமடைந்தது தீயணைக்கும் படையினரின் பாரிய முயற்சியை அடுத்து 20 நிமிடங்களில் தீ யணைக்கப்பட்டது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## மண்டூரில் பொலிசார் மீது தாக்குதல் இருவர் பலி; ஆயுதம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் மண்டூரில் பொலிஸ் நிலையத்திலிருந்து சைக்கிளில் வெளியேறிய பொலிசார் மீது விடுதலைப்புலிகள் முகாமருகே வைத்து நடத்திய துணிகரத் தாக்குதலில் இரு பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் இவர்களது ஆயுதம் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

கடந்த ஐந்தாம் திகதி மாலை ஐந்து மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் மண்டூர் 14ம் கிராமம் பொலிஸ் நிலையத்திலிருந்து சைக்கிளில் வந்த பொலிசார் மீதே 300 யார் தொலைவில் வைத்து விடுதலைப் புலிகள் இத் துணிகரத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இவர்களிடமிருந்து

- ரி 56-1 ரக துப்பாக்கி -01
- ரவைக்கூடு -01
- நடுத்தர ரவைகள் -26

ஆகிய இராணுவ ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## மோட்டார் சைக்கிள் விபத்து பொலிசார், மாணவர் பலி

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி பகுதியில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மாணவன் ஸ்தலத்திலேயே பலியானார். பொலிஸ்காரர் காயமடைந்து பின்னர் மரணமானார்

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; கடந்தநாலாம் திகதி காலை களுவாஞ்சிக்குடி எருவில் பிரதான வீதியில் பொலிசார் வந்த மோட்டார்

## நூற்றுக்கணக்கான அகதிகள் யூ. என். எச். சி. ஆரிடம் முறையீடு

(கொழும்பு)

**இலங்கைத் தமிழ் அகதிகளை வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையில், தமிழக அதிகாரிகள் இறங்கியுள்ளனர். இதற்கென அவர்கள் அகதிகளுக்கு பெரும் நெருக்கடிகளைக் கொடுத்துவருகின்றனர். இது குறித்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. தமிழக அதிகாரிகளின் இந் நெருக்குதல்கள் அகதிகளை உடன் திருப்பி அனுப்ப நடவடிக்கைஎடுக்கும்படி தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்தே எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது**

இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரையும் உடன் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கும்படி கடந்த திங்கட்கிழமை முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, அதிகாரிகள் அகதிகளை வற்புறுத்தி வருகின்றனர்.

இலங்கைக்குத் திருப்பி அனுப்ப ஒப்புதல் தரும்படிவததில் கைச்சாத்திடும் படி தமக்குத் தரும் நெருக்கடி பற்றி நூற்றுக்கணக்கான அனுப்பப்பட்டுள்ளது.

சில முகாமகளில் அகதிகள் நாடு திரும்ப ஒப்புதல் வழங்கும் வரை அவர்களுக்குக் கொடுக்கப்படும் உதவிப்பணமும், உணவுப் பொருள் வழங்குதலும் நிறுத்தப்பட்டன அன்றாட உணவுக்காக இலங்கைத் தமிழ் அகதிகள் வெளியில் வேலைக்குச் செல்லவும் அனுமதிக்க விலலை இறுதியாண்டு தவணைப் பரீட்சையின் போது முகாம்களில்

(6ஆம் பக்கம் பார்க்க)

கோளைத் தொடர்ந்து, அதிகாரிகள் முகாம்களுக்குச் சென்று நாடு திரும்ப விரும்புவதாக எழுத்தில் தரும்படி

பற்றி நூற்றுக்கணக்கான அகதிகள் எழுதிய மனுக்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்கு

ங்குதலும் நிறுத்தப்பட்டன

(6ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை மாவட்டத்தில் புலிகள் ராணுவம்மோதல்

## இராணுவ பொருள்கள் மீட்பு

(திருமலை)

திருமலை முகத்துவாரம் வாழைத் தோட்டம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையில் ஏற்பட்ட திடீர் மோதலின் போது சில இராணுவ தளபாடங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் காலை வாழைத்தோட்டம் பகுதியில் விடுதலைப் புலிகள் சென்று கொண்டிருந்தவேளை எதிர்ப்பட்ட சிறிலங்க இராணுவத்

(6ஆம் பக்கம் பார்க்க)

பொலிசார் வந்த மோட்டார் சைக்கிளும் மாணவர் வந்த மோட்டார் சைக்கிளும் எதிர் எதிரே மோதிக் கொண்டதில் மாணவன் பலியானார். பொலிஸ் காரர் காயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

இச்சம்பவத்தின் போது பலியானவர் எருவில் களுவாஞ்சிக்குடிவைச் சேர்ந்த ரவி (வயது 16) எனத் தெரியவந்துள்ளது

# கத்தோலிக்க பாப்பரசரின் வருகைக்கு பௌத்த பிக்குகள் கடும் எதிர்ப்பு

## கண்டியில் கண்டனச் சுவரொட்டிகள்

(கண்டி)

இது பௌத்த சிங்களவர்களின் புண்ணிய பூமி இதில் வேறு மதத்தை சேர்ந்தவர்கள் தரிசித்து செல்வதை நாம் விரும்பவில்லை என்ற சுவரொட்டிகள் கண்டி நகரம் எங்கும் ஒட்டப்பட்டு இருப்பதாக தெரியவருகின்றது.

கத்தோலிக்க பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அடுத்த வருட ஆரம்பத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள இருக்கின்றார். இவரின் வருகையின்போது இவர் கண்டிக்கு விஜயம் மேற்கொள்வார் என கருதப்பட்டதைத் தொடர்ந்தே சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன என தெரியவருகின்றது

இச் சுவரொட்டிகள் பௌத்த பிக்குகளின் தலைமையிலே ஒட்டப்பட்டு வருவதாகவும் சில பௌத்த விகாரைகளில் பாப்பரசரின் விஜயத்திற்கு ஒத்துழைப்பு நல்குவதை தவிர்க்குமாறு ஆலோசனை தெரிவிக்கப்படுவதாக

(6ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதிக்கான பொருள் விநியோகம்; புதிய நடைமுறை அரசு அறிவிப்பு

(கொழும்பு)

வடபகுதிக்கு கொழும்பில் இருந்து அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வருவதற்கான அனுமதி பெறுவதில் தற்போது புதிய நடைமுறையை அரசாங்கம் அறிவித்துள்ளது

மேற்படிபொருள்களுக்கான அனுமதியைப் பெறுவதற்கு தற்போது இராணுவ அதிகாரிகளிடம் மட்டுமன்றி அத்தியாவசிய சேவைகள் பிரிவு அதிகாரிகளிடமும் ஒப்பம் பெறவேண்டியநிலை தோன்றியுள்ளது.

வடபகுதிக்கு சாதாரணமாகவே அனுமதி வழங்கப்பட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கு கூட அனுமதி பெறுவதாயின் அத்தியாவசிய சேவைகள் பிரிவினரின் விதப்புரைகளுக்கமையவே கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி வழங்க முடியும் எனத் தெரியவருகின்றது.

இவற்றை விட வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கு கூட்டுப்படைத் தலைமையகம் நீண்ட விசாரணைகளின் பின்அனுமதி கோரியபொருள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினரால் மீனவர் ஒருவர் கைது

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கடற்பகுதியில் வைத்து மீனவர் ஒருவரை சிறிலங்கா கடற்படையினர் பிடித்துச் சென்றுள்ளனர், இவருடன் இருந்த என்ஜின், வலை என்பனவற்றையும் படையினர் அபகரித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று காலை 6-15 மணியளவில் நடைபெற்றது ஆதிகோவிலடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான ஆறுமுகம்-தனராசா (வயது 20) என்பவரை கடற்படையினர் பிடித்துச் சென்றுள்ளனர்,

இவருடன் தொழிலில் ஈடுபட்டிருந்த அதே இடத்தைச்

(6ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய - இலங்கை நட்புறவுச் சங்கம் அதிருப்தி

சட்ட ஒழுங்குப் பிரச்சினைக்கு இலங்கைத் தமிழ் அகதிகளே காரணம் என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தமிழ் நாடு சட்ட மன்றத்தில் கூறியது குறித்து இந்திய-இலங்கை நட்புறவுச் சங்கம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இலங்கையில் நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கும் இவ் வேளையில் அகதிகளைத் திருப்பி அனுப்புவது கொடுமையான செயல் என்று மேற்படி சங்கத்தின் தலைவர் ரி. எஸ். கோபாலன் கூறினார்

# ஜெயலலிதாவின் கூற்றுக்கு தி.மு.க கண்டனம்

(சென்னை)

தமிழ் நாட்டில் நடக்கும் கொள்ளைகளுக்கும் மோசமாகிக் கொண்டு வரும் சட்டம் ஒழுங்கு நிலைமைகளுக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளே காரணம் என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூறியதை தி.மு. கவின் செயற்குழு கண்டித்துள்ளது.

தி. மு. க நேற்று முன்தினம் நடத்திய அதன் செயற்குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளது.

# அகதிகளின் 177 படகுகள் இந்தியாவில் தடுத்து வைப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழருக்கு சொந்தமான 177 படகுகளை இந்திய அரசு 1990 முதல் தடுத்து வைத்திருப்பதாக இலங்கையிலிருந்து அண்மையில் இந்தியா சென்ற புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சின் அதிகாரிகள் குழு கண்டறிந்துள்ளது.

இவற்றில் பெரும்பாலானவை 1990 ஆம் ஆண்டுக்கு பின்னர் பாதுகாப்புத் தேடி தமிழகம் சென்ற அகதிகளுக்கு சொந்தமானவை சிலமீனவர்களுக்கு சொந்தமானது. இப்படகுகளை விரைவில் இலங்கையிடம் திருப்பி ஒப்படைக்க இந்திய உள்துறை அமைச்சு அதிகாரிகள் உறுதியளித்ததாக புனர் வாழ்வு அமைச்சு

(6ஆம் பக்கம பார்க்க)

# இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண அரசியல் வாதிகளை நெருக்குங்கள்

## சிங்கள சமூகத்திடம் கொழும்புத் தமிழர் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பதினொரு ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் உள்நாட்டுப் போருக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சிகள் எடுக்கும்படி அரசியல் வாதிகளுக்கு நெருக்கடி கொடுக்குமாறு கொழும்பில் வாழும் தமிழர்கள் செயற்பாட்டுக் குழுவொன்று சிங்களச் சமுதாயத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பிலுள்ள தமிழர்களின் செயற்பாட்டுக் குழு, ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் கூற்றுக்கள், அப்பட்டமான இனத்துவேஷக் கூற்றுக்கள் எனக் கண்டனம் தெரிவித்து அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது. அத்துடன் கொழும்பில் தமிழர்கள் கைது செய்யப்படுவதற்கும் இம்சிக்கப்படுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கில் தமிழர்கள் கொழும்பில் கைதுசெய்யப்படுவதாக அண்மையில் சர்வதேச மன்னிப்புச் சபை கூறியது பெரும்பாலானோர் தகுந்த காரணம் எதுவும் இன்றிக் கைது செய்யப்படுவதாகவும் அந்த அமைப்புத் தெரிவித்தது. இப்போதும் இப்படி நடைபெறுவதாக கொழும்பில் புதிதாக அமைக்கப்பட்ட தமிழர்கள் செயற்பாட்டுக் குழுவின் தலைவர் டாக்டர் வேலாயுத பிள்ளை பி.பி..ஸிக்குக் கூறினார்.

கொழும்பில் வாழும் எந்தத் தமிழரும் தான் பாதுகாப்பாக இருப்பதாக உணர்வதில்லை என்றும் அவர் கூறினார்.

தமிழர்கள் செயற்பாட்டுக் குழு புத்திஜீவிகள் மற்றும் சமூக சேவையாளரால் இரண்டு மாதங்களுக்கு முன் அமைக்கப்பட்டது.

உள்நாட்டுப் போரைமுடிவு கட்டச் சிங்கள மக்கள் தாமே திட்டங்கள் அமைத்துத்

(6ஆம் பக்கம் பார்க்க]

## 'மண்ணுக்காக' ஒளிஒலிநாடா காண்பிப்பு

நிதர்சனம் அமலன் அரங்கில் நேற்று பிற்பகல் 'மண்ணுக்காக' ஒளி ஒலி நாடா [வீடியோ] பத்திரிகையாளர் மற்றும் கலைஞர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகமும் நிதர்சனமும் இணைந்து இப்படத்தை உருவாக்கியுள்ளன

## வீரச்சாவு



**2ஆம லெப், கோபிதரன்**

மன்னார்த்திவு பள்ளிமுனை பொலிஸ் நிலையத்தின் மீது நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது விழுப்புண் அடைந்து சிகிச்சைக்காக கொண்டு செல்லும் வழியில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2 ஆம் லெப்டினன்ட் கோபிதரன் (செல்வரட்ணம் ரூபன் - கற்கடந்தகுளம் முருங்கன் இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறனர்

## விபத்தில் ஒருவர் பலி

மோட்டார் சைக்கிள்-மினிபஸ் விபத்திற்குள்ளானதில் ஒருவர் பலியானார் மற்றவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 8மணியளவில் நுணாவில் பகுதியில் எதிரெதிரே வெளிச்சமின்றி வந்த இவ்விரு வாகனங்களும் மோதிக் கொண்டதில் நுணாவிலை சேர்ந்த ஜெகேந்திரன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### அக்கரைச் சீமையில் நாவல்

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாவல் அக்கரைச் சீமையில். 501 புதியகளம் வித்தியாசமான பாத்திரங்கள் விறுவிறுப்பான கதை ஓட்டம் பூபாலசிங்கம் புத்தகசாலை (8171)

### கோழி பராமரிப்பவர் தேவை

எமது கோழிப்பண்ணையில் கோழி பராமரிப்பதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். கீழ்க்காணும் முகவரிக்கு 9 5-94 காலை 10 மணிக்கு நேரில் வரவும் அந்திவானம் பதிப்பகம் நாவலர் வீதி நாவாந்துறை யாழ்ப்பாணம். (8182)

### தேவை

திருநெல்வேலியில் இயங்கும் ஆடைதயாரிக்கும் தொழிற்சாலைக்கு பிரேசியர் தைப்பதில் நன்கு அனுபவம் வாய்ந்த பெண் தொழிலாளர்களும், பெண்களுக்கான நவீன ஆடைகளை வெட்டுவதிலும், தைப்பதிலும் நன்கு அனுபவம் வாய்ந்த பெண் தொழிலாளர்களும் தேவை 16-05 94க்குமுன் விண்ணப்பிக்கவும். விள. இல. 330 மே/பா ஈழநாதம் யாழ்ப்பாணம். (8228)

### விற்பனைக்குண்டு

ஒன்றரை மாதம் நிரம்பிய அழகிய பொமனேரியன்நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு இல, 22 ம தெல்லிப்பழை வீதி (வட்டு இந்துக்கல்லூரிக்கு அருகாமையில்) சித்தன்கேணி [8231]


# கட்சியின் நன்மை கருதியே போரில் நான் குதிக்கவில்லை

## சிறிசேன கூரே டி. பிக்கு கடிதம்

எனது உணர்வுகள் பாரதூரமான வகையில் புண்படுத்தப்பட்டன எனது நற்பண்புகளிற்கு இழுக்கு ஏற்படுத்தப் பட்டுள்ளது என அமைச்சர் சிறிசேனகூரே ஜனாதிபதி விஜேதுங்கவிற்கு எழுதியகடிதத்தில் தெரிவித்துள்ளார்.

1.5.94 இல் அமைச்சர் கூரே ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் வருமாறு; மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களே, 22-4-94 இல் நான் தங்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் மேலதிக விடயம் இது. நான் ஐ.தே.க வின் விசுவாசம் மிக்க உறுப்பினர்கள் இருவரின் புதல்வன் அவர்களில் ஒருவர் கட்சியின் ஸ்தாபக அங்கத்தவர் மத்திய கொழுபின் ஐ.தே.க இளைஞர் அணியின் முதல் தலைவராக எனது16 ஆவது வயதில் நான் பதவி வகித்தேன் தொடர்ந்த தசாப்தங்களிலும் எனது கட்சிக்காகவும் மக்களுக்காகவும்சேவை ஆற்றினேன்.

கட்சி இக்கட்டான நிலையில் இருந்த போதும் ஜனநாயக அமைப்பு முறைக்கு கேள்வி எழுந்த போதும் நான் ஆற்றிய பணிகள் பலவாகும். 1988 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திற்காக நான் மேற்கொண்ட அமைப்பு வேலைகள் பற்றியும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன் இந்த வேலைகள் வெற்றிகரமான முறையில் அன்று மேற்கொள்ளப்படவில்லையாயின் ஜனநாயக முறைமைகளோ நாமோ இன்று உயிருடன் வாழ்ந்திருக்க மாட்டோம் என்பது நிச்சயம்

கட்சியில் நான் ஆற்றிய சேவைகளை கருத்திற் கொண்டு ரஞ்சன் விஜேரட்னாவின் படுகொலையை தொடர்ந்து எமது தலைவர் பிரேமதாசாவினால் கட்சியின் பொது செயலராக நான் நியமிக்கப்பட்டேன். எனது கடமைகளையும் பொறுப்புகளையும் முன்னெடுத்து செல்வது இன்று கடினமாக உள்ளது. அவநம்பிக்கைக்குரிய சூழ்நிலை உருவாக்க பட்டுள்ளது தவறான பிரசாரம் திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனக்கு எதிராக எதிரணியின் இரகசிய இணக்கப்பாட்டுடன் இது மேற்கொள்ளப்பட்டது. இச்சதியை எதிர்த்து வெல்லும் வலிமை என்னிடம் இல்லை என எவரும் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை ஏனெனில்எனதுதலைவரும் நண்பருமான பிரேமதாசாவிடம் நான் அரசியல் போராட்டத்திற்குரிய பயிற்சியையும் மனவலிமையையும் அவரின் கீழ் பணியாற்றிய கால கட்டத்தில் பெற்றுள்ளேன் எவ்வாறெனினும் குறிப்பாக தேர்தல் ஆண்டான இவ்வருடம் கட்சியின் ஒற்றுமையையும் அதன் வலுவையுமே பிரதானமான ஒன்றாக நான் கருதுகிறேன் அதனாலேயே உட்கட்சிப் போராட்டத்தில் குதிக்க நான் விரும்பவில்லை அத்தகைய ஒரு போராட்டம் கட்சி அரசு ஆகியவற்றின் உறுதியை குலைத்துவிடும் எனவே இத்தருணத்தில் கட்சியின் பொதுச்செயலர் பதவியை ராஜினாமா செய்ய முடிவு செய்து அதை சமர்ப்பிக்கிறேன்

# இனப்பிரச்சினை தீர்வு பேச்சுகளில் சு. கட்சி உறுதி

## கம்பஹா எம், பி. ஜயக்கொடி

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான தீர்வை சகல தரப்பினருடனும் பேச்சு நடத்தி மேற்கொள்வதில் சுதந்திரக்கட்சி உறுதியான கொள்கை கொண்டிருப்பதாக இக் [...] னை தொடர்பாக எம்மிடம் உறுதியான கொள்கை உள்ளது உரியவேளையில் நாம் அதை வெளிப்படுத்துவோம் உரிய தீர்வை அரசு இன்னும் முன்வைக்க வில்லை வடக்கு-கிழக்கு யுத்தம் தொடர்பாக அரசியல் உள்ளார் முரண்பா[...] தம், எஸ். எல். குணசேகரா எம்.பி யின் ஆலோசனைகள் என்பவை மிகவும் சிறந்தவை அவை எவையுமே நடைமுறைக்குவரவில்லை

செடி, கொடி பேச்சுகளால் சிறுபான்மையினர் மனம்புண்பட்டுள்ளனர். யாழ்ப்பாண [...]

### உதைபந்தாட்ட போட்டிகள்

அளவெட்டிவிநாயகர்விளையாட்டு கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி மகாஜனக் கல்லூரியின் இணுவில் மைதானத்தில் நடைபெறுகிறது. இன்றைய போட்டிகளாக இரண்டாம் பிரிவு ஆட்டத்தில் வசாவிளான் வயவை வி, கழகத்தை எதிர்த்து சுழிபுரம் சத்தியா வி, கழகமும், முதலாம் பிரிவு ஆட்டத்தில் உரும்பராய் ஒஸ்கா வி. கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் வி. கழகமும் விளையாடவுள்ளன போட்டிகள் மாலை 3. 30 மணிக்கு ஆரம்பமாகும்.

### ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

புங்குடு தீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம், புங்குடு தீவு சித்திவிநாயகர் வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலகளின் பழைய மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு இன்று பிற்பகல் 2 00 மணிக்கு ஆனைப் பந்திச் சந்திக்கு அருகாமையில் உள்ள உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

### 'ஆக்கம்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரி விரிவுரையாளர்களினால் காலாண்டுக்கு ஒரு முறை வெளியிடப்படும் "ஆக்கம்" சஞ்சிகை வெளியீடும் மெய்யியல் துறையில் முதுகலைமாணி (M.A) பட்டம் பெற்ற விரிவுரையாளர் வே. யுகபாலசிங்கம் அவர்களிற்கான கௌரவிப்பு பட்டப்படிப்பு கல்லூரி மாணவர் ஒன்றியத்தினால் நேற்று பட்டப் படிப்பு கல்லூரியில் நடாத்தப் பட்டது.

முதலாவது பிரதியை விரிவுரையாளர் உமா காந்தனுக்கு வழங்கி "ஆக்கம்" சஞ்சிகையின் ஆசிரியரும் விரிவுரையாளருமான வே. யுகபாலசிங்கம் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். ஆசியுரையை தொழில் நுட்பக் கல் [...]

மட்டு. தெகிலாமுனை

# கிராமத்திற்குள் புகுந்து ராணுவத்தினர் அட்டகாசம்

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச்சோலை முகாமிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தெகிலாமுனை கிராமத்திற்குள் புகுந்து பல பொதுமக்களை அடித்து துன்புறுத்தியதுடன் அப்பகுதியை விட்டு வெளியேறுமாறும் மிரட்டியதாக தெரிவிக்கப்படுகிறது

கடந்த ஐந்தாம் திகதி கொக்கட்டிச்சோலை முகாம் சிறிலங்கா இராணுவத்தினர் காஞ்சிரன்குடா தெகிலாமுனை கிராமத்திற்குள் புகுந்து அங்குள்ள மக்களைக் கைது செய்ததுடன் வீதிச் சோதனைகளிலும் ஈடுபட்டனர்.

பின்பு கைது செய்த மக்களை தாக்கியுள்ளனர் இதன் போது ஆறு பிள்ளைகளின் தந்தையான மாணிக்கப்பிள்ளை கனகரத்தினம் என்பவரைத் தாக்கியதில் இவரது கை, கால்கள் உடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெகிலாமுனை கிராமத்தை சுற்றிவளைத்து அட்டகாசம் புரிந்த இராணுவத்தினர் அங்கிருந்து மக்களை வெளியேறுமாறு மிரட்டிவிட்டுச் சென்றுள்ளனர்.


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்



மலர்வு: 30.09.1917

உதிர்வு: 10.04.1994

### அமரர் சின்னத்துரை ஈஸ்வரலிங்

(டக்மாஸ்டர்)

நாளை 10 05-94 செவ்வாய்க்கிழமை காலை 6.00 அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேஷ்டி, சபிண்டீகரண கிரியைகளிலும் மதியபோசனத்திலும்கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மாசாந்தியடையபிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

- குடும்பத்தினர்

நெடியகாடு,
வல்வெட்டித்துறை. (8234)

ள்ளை கொண்டிருப்பதாக இக் கட்சியின் கம்பஹா மாவட்ட எம். பி லக்ஷ்மன் ஜயக்கொடி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வட - கிழக்கு இனப்பிரச்சி

அரசியல் உள்ளார் முரண்பா டானகருத்துக்களை கொண்டுள்ளவர். பண்டா செல்வா ஒப்பந்தம், ராஜிவ்- ஜே. ஆர். ஒப்பந்தம், பங்களூர் ஒப்பந்

யுத்த முனைக்கு எந்த தலைவர்களும் போவதில்லை எனவும் லக்ஷ்மன் ஜயக்கொடி மேலும் தெரிவித்தார். (86)

யை தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் ஜெயரட்ணமும், அறிமுக உரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சிவலிங்கராஜா அவர்கள் நிகழ்த்தினார்.

மேலும் கௌரவிப்பில் வாழ்த்துரைகளை மேற்படி கல்லூரியின் விரிவுரையாளர்களும், மாணவ மாணவியரும் நிகழ்த்தினர்.

## பயிலுனர் ஆசிரியர் சந்திக்கவும்

மருதனார்மட தொலைக் கல்வி நிலைய 2ஆம் வருட பயிலுனர் ஆசிரியர்கள் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிரேஷ்ட போதனாசிரியரைச் சந்திக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்

## உதவிப்பணம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி தபாலகத்தில் மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறுவோர் தமது வைகாசி மாதத்தின் பணத்தினை 15ஆம் திகதிக்கு முன்னதாக தபாலக அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என தபாலக அதிபர் கேட்டுள்ளார், (88)

## நிர்வாக சபை கூட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரசபைக் குட்பட்ட சனசமூக நிலையங்களின் வருடாந்த நிர்வாக சபை தெரிவு சமாசக் கூட்டம் கடந்த சனியன்று சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் சாவகச்சேரி விசேட ஆணையாளர் திரு. சி' நடராசா தலைமையில் இடம்பெற்றது'

## மெய்வல்லுநர் போட்டி

(தென்மராட்சி)

மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 [illegible]க்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. சி. கந்தசாமி தலைமையில் இடம் பெறும்.

இதற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கமும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. நா சத்தியநாதன் அவர்களும் கௌரவ விருந்தினராக தென்மராட்சிக் கல்விக் கோட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர். திரு எழிலனும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

### பேராதனை பல்கலைக்கழகம்

# மீண்டும் திறக்குமாறு கோரி கொழும்பில் மாணவர் மறியல்

(கொழும்பு)

மூடப்பட்டுள்ள பேராதனை பல்கலைக்கழகத்தை மீண்டும் திறக்குமாறு கோரி அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கொழும்பில் பல இடங்களில் கடந்த சில நாட்களாக மறியல் போராட்டத்தை நடத்தி வருகிறது. நவசமசமாஜக்கட்சி தலைவர் வாசுதேவநாணயக்கார, மற்றும் தினேஷ் குணவர்த்தனா ஆகியோர் இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

கொழும்பு லிப்டன் சந்தி, கோட்டை ரயில் நிலையம் ஆகிய இடங்களில் மாணவர்களால் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

இதேவேளை பேராதனை பல்கலைக்கழக விடுதி பிரச்சினைக்குஉடனடித் தீர்வுகாண்பதற்காக 180 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக விவகார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்- இப்பணத்தின் ஒரு பகுதியைக் கொண்டு ஊழியர் விடுதியை மாணவர் விடுதியாக புனர்நிர்மாணம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது- இதன்மூலம் 360 மாணவர்களுக்கு விடுதி வசதி கிடைக்கும்

இக்கட்டடத்தில் வாழும் ஊழியர்களின் குடும்பங்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவர்.

# சுதந்திரக கட்சியில் இணையப் போவதில்லை

## முஸ்லிம் காங்கிரஸ் எம். பி ஹிஸ்புல்லா

(கொழும்பு)

நான் ஒரு போதும் முஸ்லிம் காங்கிரஸை கைவிட்டு சுதந்திரக்கட்சியில் இணைய மாட்டேன் என முஸ்லிம் காங்கிரசின் மட்டக்களப்பு எம்- பி ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

எனது அரசியல் எதிரிகளால் சுதந்திரக் கட்சியில் நான் இணையவுள்ளதாக பரப்பப்பட்ட செய்தியில் உண்மையில்லை இன்றைய அரசியல் சூழ்நிலையில் சுதந்திரக்கட்சி பக்கம் வீசும் செல்வாக்கு அலையை பயன்படுத்தி அப்பக்கம் சாய்ந்து விட்டதாக நினைப்பது தவறு எனவும் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

## மட்டுவுக்கு சர்வமத குழு

(கொழும்பு)

அசாஜி தேரர் தலைமையிலான சர்வமத குழு மட்டக்களப்பு சென்றுள்ளது. இக்குழுவினர் அங்கு சர்வோதய அலுவலகத்தில் தங்கியுள்ளனர். இக் குழுவினர் மட்டக்களப்பு அம்பாறை பகுதிகளூடாக எதிர்வரும் 15 ஆம் திகதி வரை சமாதான யாத்திரை செல்வர்.

## தேர் உற்சவம்

உரும்பராய் கிழக்கு சிவபூதநாதர் வருடாந்த சித்திரை தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வசந்தமண்டப பூசையுடன் ஆரம்பமாகும் செவ்வாயன்று தீர்த்தத்திருவிழா 10 மணிக்கு நடைபெறும்.

# பட்டதாரி ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்

(கொழும்பு)

வேலையற்றிருக்கும் 8000 பட்டதாரிகளில் ஒரு தொகையினர் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்கள் அடுத்தமாதமளவில் கோரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

விஞ்ஞான, ஆங்கில வர்த்தக துறைகளில் கற்பிக்கக் கூடியவர்கள் ஆசிரியர்களாக தெரிவு செய்யப்படுவர்-

## 'அமுல்' இறக்குமதி

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து 'அமுல்' பால்மாவை கூட்டுறவு மொத்த திணைக்களம் இறக்குமதி செய்யவுள்ளது. இந்தியாவில் பிரபலமான அமுல் பால்மா இங்குஏனைய பால்மா வகைகளையும் விட குறைந்தளவு விலைக்கே விற்பனை செய்யப்படும் என திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## இடமாற்றம் தற்காலிக இடைநிறுத்தம்

(கொழும்புத்துறை)

யாழ். செயலகத்திலிருந்து நிர்வாகப் பரவலாக்கலின் கீழ் பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட 37 பேரின் இடமாற்றங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

# மரக்கூட்டுத்தாபனத்தின் கிளைகளுக்கு மூடுவிழா

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த மரக் கூட்டுத் தாபனக் கிளைகளை (டிப்போ) சிறிலங்கா அரசு கடந்த ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் மூடி உள்ளதாகவும் இங்கு கடமையாற்றிய ஊழியர்களை தென்பகுதிக்கு இத் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்துள்ளதாகவும் அரச மரக் கூட்டுத் தாபனத்தில் கடமை புரியும் ஊழியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இவர்களுக்கு இதுவரை காலமும் வழங்கி வந்த சம்பளக் கொடுப்பனவுகளும் கடந்த மாதம் தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது ஆனால் யாழ்ப்பாணத்தில் மரக் கூட்டுத்தாபனம் இயங்கி வருவதாக வெளி உலகிற்கு காட்டுவதற்காக பிராந்திய மரக் கூட்டுத்தாபனத்தை மட்டும் இருபாலையில் இயங்க வைத்துள்ளது. இங்கு ஒரு மரக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளரும் சில எழுதுவினைஞர்களும் கடமை புரிகிறார்கள்.

கிளைகளில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுள்ள ஊழியர்கள் தமதுஇடமாற்றம் தொடர்பாக தென்பகுதிக்கு செல்வதில்லை எனவும் தமது வேலைகளை கைவிட முடிவு செய்துள்ளதாகவும் யாழ்ப்பாணத்தில் கடமைபுரியும் அரச மரக்கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் இதுவரை ஆறு அரச மரக்கூட்டுத்தாபனக் கிளைகள் இயங்கிவந்துள்ளதுடன் இவ் ஒவ்வொன்றிலும் கிளை அதிகாரி, பாதுகாப்பு உத்தியோகத்தர், காவலாளி என மூவர் கடமையாற்றினார்கள் (17)


# நினைவு கூருகின்றோம்.. 09.05.1994

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்- உடுப்பிட்டியில் இராணுவ அதிகாரி மெண்டிஸ் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**நித்தி** (கந்தையா அபிமன்னசிங்கம் - இலந்தைக் காடு, வல்வெட்டித்துறை - யாழ்)

வல்வெட்டித்துறைப் பகுதிமீது முற்றுகை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினரால் பரவலாகவும், பொலிகண்டி நூல் நிலையத்தினுள் அடைத்து வைத்து குண்டு வைத்தும் படுகொலை செய்யப்பட்ட 90 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு யாழ் - கச்சாயில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப் நிதி-இராமேஸ்வரன்** (முருகேசம்பிள்ளை இராமேஸ்வரன்-மீசாலை. சாவகச்சேரி)

1989ஆம் ஆண்டு யாழ்-மயிலிட்டியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்,

**சோதி** (கனகசபை சண்முகசோதி-தையிட்டி, காங்கேசன்துறை யாழ்)

1991ஆம் ஆண்டு திருமலை-கந்தளாய் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**லெப். ஜனகன்** (கதிர்காமத்தம்பி செல்வரட்ணம் தம்பலகமம் - திருமலை)

வவுனியா - கோழியாகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மனோஜ்** (கந்தையா ஜெயக்குமார் - குடத்தனை மருதங்கேணி - யாழ்)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**பொருமாள்** (பரமகுரு தெய்வேந்திரம் - இன்பருட்டி - பருத்தித்துறை - யாழ்)

அம்பாறை - அக்கரைப்பற்று, பனங்காட்டுப் பகுதியில் முகாமின் முன்பாகவுள்ள வீதியால் சென்றுகொண்டிருந்தபொழுது சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது சுட்டுக்கொல்லப்பட்ட கொம்மாந்துறை சந்தை வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பெண், மற்றும் மாவடி வேம்பைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு யாழ் - கொடிகாமம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**2-ம் லெப் மாலி - கண்ணன்** (நாகலிங்கம் பகீரதன் - மீசாலை தெற்கு - சாவகச்சேரி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9372)

# கணிதம் O/L

பயிற்சி (1) இற்கான விடைகள்

1. $a=5$ $d=5$ 6. $a=(2x+1)$ $d=(x+4)$
2. $a=0{\cdot}1$ $d=0\ 2$ 7. $a=(a+x)$ $d=x$
3. $a=-7$ $d=7$ 8 $a=(7a-3)$ $d=(-2a+6)$
4. $a=2x$ $d=4x$ 9. $a=1$ $d=(3-m)$
5. $a=100$ $d=-10$ 10. $a=3\frac{1}{4}$ $d=\frac{1}{3}$

பயிற்சி 1 வினா (9) இது முன்பு அடித்தது தவறு

1, (4—m), (7—2m) ...... ×

உதாரணம் (4) இற்கான பிறிதொரு முறை

4ம் உறுப்பு $a+3d$
15ம் உறுப்பு $a+14d$

∴ 4ம், 15ம் உறுப்புக்களின் கூட்டுத்தொகை $= a+3d+a+14d$
$= 2a+17d$

ஆனால் $a=-19$ $d=4$ ஆகும்

∴ கூட்டுத்தொகை $= 2\times(-19)+17\times4$
$= -38+68$
$= 30$

பயிற்சி 2

அ) பின்வரும் கூட்டல் தொடர்கள் ஒவ்வொன்றிற்கும் அருகே உள்ள உறுப்பைக் காண்க.

1. 2, 7, 12 ... 13ம் உறுப்பு?
2. 12, 7, 2 ... 13ம் உறுப்பு?
3. (7a - 3), (5a+3), (3a+9) ... 17ம் உறுப்பு?
4. $3\frac{1}{4}$, $3\frac{7}{12}$, $3\frac{11}{12}$ 10ம் உறுப்பு?
5. 0.1, 0.3, 0.5 ...... 23ம் உறுப்பு?

ஆ) மட்டமான தரையில் படரும் ஓர் தாவரம் ஒவ்வொரு நாளும் அதற்கு முதல் நாள் படர்ந்திருந்த பரப்பளவைவிட $7Cm^2$ அதிகமாகப் படர்ந்திருந்தது. இன்று (10-04-94) மொத்தமாக $21Cm^2$ படர்ந்து காணப்படின் எதிர்வரும் 12-05-94 திகதி மொத்தமாக எவ்வளவு படர்ந்து காணப்படவேண்டும்.

1·5 தரப்பட்ட உறுப்பு எத்தனையாவது உறுப்பு என காணல்

∴ இங்கு Tn தரப் ட்டு n கேட்கப்டும்.

உதாரணம் (1)

5, 9, 13 ......... எனும் கூட்டல் தொடரில் 45 என்பது எத்தனையாவது உறுப்பு எனக் காண்க.

இங்கு $a=5$, $d=4$, $Tn=45$, $n=?$

$$Tn = a+(n-1)d$$
$$45 = 5+(n-1)4$$
$$45-5 = (n-1)4$$
$$40 = (n-1\ 4$$
$$\frac{40}{4} = (n-1)$$
$$10 = (n-1)$$
$$10+1 = n$$
$$11 = n$$

45 என்பது 11-ம் உறுப்பு ஆகும்

உதாரணம் (2)

—7, 0, 7, ......... எனும் கூட்டல் தொடரில் 490 என்பது எத்தனையாம் உறுப்பு எனக் காண்க.

இங்கு $a=-7$, $d=7$, $Tn=490$, $n=?$

$$Tn = a+(n-1)d$$
$$490 = -7+(n-1)7$$
$$490+7 = n-1)7$$

உதாரணம் (3)

$3\frac{1}{4}$, $3\frac{7}{12}$, $3\frac{11}{12}$, ......... எனும் கூட்டல் தொடரில் $5\frac{1}{4}$ என்பது எத்தனையாம் உறுப்பு எனக் காண்க

இங்கு $a=3\frac{1}{4}$, $d=\frac{1}{3}$, $Tn=5\frac{1}{4}$, $n=?$

$$Tn = a+(n-1)d$$
$$5\tfrac{1}{4} = 3\tfrac{1}{4}+(n-1)\tfrac{1}{3}$$
$$5\tfrac{1}{4}-3\tfrac{1}{4} = (n-1)\tfrac{1}{3}$$
$$2 = (n-1)\tfrac{1}{3}$$
$$2\times3 = (n-1)$$
$$6 = (n-1)$$
$$6+1 = n$$
$$7 = n$$

∴ $5\frac{1}{4}$ என்பது 7-ம் உறுப்பு ஆகும்.

பயிற்சி 3

1. 5, 10, 15 ...எனும் கூட்டல் தொடரில் 555 என்பது எத்தனையாம் உறுப்பு எனக் காண்க.
2. 60, 57, 54 ... எனும் கூட்டல் தொடரில் —3 என்பது எத்தனையாம் உறுப்பு எனக் காண்க.
3. 3·7, 4·0, 4·3 ... எனும் கூட்டல் தொடரில் 8·2 என்பது எத்தனையாம் உறுப்பு எனக் காண்க.
4. அ) இராகினியின் தந்தை இராகினியின் ஒவ்வொரு பிறந்த நாளிலும் அவளது வயதிலும் 130 மடங்கு ரூபாய்கள் பெறுமதியான பணத்தினை வங்கி ஒன்றில் வைப்பு செய்து வந்தார். அவளது 16ஆவது பிறந்த நாளிலன்று எவ்வளவு பணம் வைப்புச் செய்வார்?

ஆ) இராகினி பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி பிறந்திருப்பின் மேற்படி வினாவுக்கு விடை தருக?

1: 6 தரப்பட்ட தரவுகளிலிருந்து தொடரைக் காணல்.

உதாரணம் (1):-

ஒரு கூட்டல் தொடரின் 3ஆம் உறுப்பு 15உம், 7ஆம் உறுப்பு 3உம் ஆகும் இத்தொடரைக காண்க.

3ம் உறுப்பு $a+2d$ ஆகும்
7ம் உறுப்பு $a+6d$ ஆகும்

$a+2d = 15$ —— (1)
$a+6d = 3$ —— (2)
(1) - (2) —► $-4d = 12$

$$d = \frac{12}{4}$$
$$= -3$$

d=(-3) ஐ (1) இல் பிரதியிட

$$a+2d = 15$$
$$a+2\times(-3) = 15$$
$$a+(-6) = 15$$
$$a-6 = 15$$
$$a = 15+6$$
$$= 21$$

[a = 21
]d = (—3)

∴ தொடர்:- 21, 18, 15.........

உதாரணம் (2):-

4ம் உறுப்பு —1 ஆகவும் 9ம் உறுப்பு 19 ஆகவும் உள்ள கூட்டல் தொடரின் 26ம் உறுப்பைக் காண்க.

$a+3d = -1$ —(1)
$a+8d = 19$ —(2)
(2)-(1)=)

$$5d = 20$$
$$d = \frac{20}{5}$$
$$= 4$$

d = 4 ஐ (1) இல் பிரதியிட

$$a+3\times4 = -1$$
$$a+12 = -1$$
$$a = -1-12$$
$$= -13$$

(a = —13)
(d = 4 )

26ம் உறுப்பு $= a+25d$
$= -13+25\times4$
$= -13+100$
$= 87$

∴26ம் உறுப்பு 87 ஆகும்

உதாரணம் (3):-

கூட்டல் தொடர் ஒன்றில் 2ம் உறுப்பு $-\frac{1}{6}$ ஆகும்; அதன் 1ம் 5ம் உறுப்புக்களின் கூட்டுத்தொகை $-1\frac{1}{3}$ ஆகும்.

அ) இந்நிபந்தனைகளைத் திருப்தி செய்யும் இரு சமன்பாடுகளைத் தருக.

ஆ) தொடரைக் காண்க.

அ) $a+d = -\frac{1}{6}$—(1)
$a+a+4d = -1\frac{1}{3}$
$2a+4d = -4/3$—(2)

ஆ) $a+d = -\frac{1}{6}$ (1)
$2a+4d = -4/3$ — (2)
(1) × 2 =)
$2a+2d = -\frac{1}{3}$ — (3)
(2) — (3) =)
$2d = -1$
∴$d = -\frac{1}{2}$

$d = -\frac{1}{2}$ ஐ (1) இல் பிரதியிட

$$a+(-\tfrac{1}{2} = -\tfrac{1}{6}$$
$$a-\tfrac{1}{2} = -\tfrac{1}{6}$$
$$a = -\tfrac{1}{6}+\tfrac{1}{2}$$
$$= \frac{-1+3}{6}$$
$$= \frac{2}{6}$$
$$a = \tfrac{1}{3}$$

∴ தொடர்:- $\frac{1}{3}$, $-\frac{1}{6}$, $-\frac{2}{3}$...

பயிற்சி - 4

1. ஓர் கூட்டல் தொடரின் 3ம் உறுப்பு 70ம், 6ம் உறுப்பு 55ம் ஆகும் 14ம் உறுப்பை காண்க.
2. 1ம் 2ம் உறுப்புகளின் கூட்டுத்தொகை 13ம் 3ம், 4ம் உறுப்புளின் கூட்டுத்தொகை 23ம் ஆக உள்ள கூட்டல் தொடரைக் காண்க.
3. கூட்டத் தொடர் ஒன்றின் 1ம் 3ம் உறுப்புகளின் கூட்டுத் தொகை 2ம் உறுப்பிற்கு சமனாகும். 7ம் உறுப்பின் அரை மடங்கு 5ம் உறுப்பைவிட 2 அதிகமாகும்.

அ) இரு சமன்பாடுகளைத் தருக.

ஆ) தொடரைக் காண்க.

இ) இத்தொடரில் —40 என்பது எத்தனையாம் உறுப்பு?

4 ஒரு பஸ்ஸில் பயணம் செய்வதற்கு அறவிடப்படும் கட்டணம் ஒவ்வொரு k.m. தூரத்துடன் ஒப்பிடுகையில் அதன் பெறுமானம் ஒரு கூட்டல் தொடரில் இருப்பதாக பயணிகள் அறிந்திருந்தனர். அப் பஸ் வண்டியில் பயணம் செய்ய விரும்பிய அனுஷியா ஏற்கனவே பயணம் செய்த இருவரிடம் விசாரித்தாள். ஒருவர், தான் 5 k.m தூரம் பயணம் செய்ததாகவும் இதற்கு கட்டணமாக ரூபா 4-50 செலுத்தியதாகவும், மற்றவர் தான் 12 k.m தூரம் பயணம்

$$497 = (n-1)7$$

$$\frac{497}{7} = (n-1)$$

$$71 = (n-1)$$

$$71 + 1 = n$$

$$72 = n$$

ஃ 490 என்பது 72-ம் உறுப்பு ஆகும்.

4-50 செலுத்தியதாகவும், மற்றவர் தான் 12 k.m தூரம் பயணம் செய்ததாகவும் இதற்கு கட்டணமாக ரூபா 8-00 செலுத்தியதாகவும் கூறினார், ஆனால் அனுஷியாவிடம் ரூபா 17-50 தான இருந்தது. இப்பணத்தைக் கொண்டு அப் பஸ் வண்டியில் எவ்வளவு தூரம் பயணத்தை மேற்கொள்ளலாம்?


த. நித்தியானந்தம்
சரசாலை


# மாணவர் அரங்கு

## தாவரவியல்

## A/L

02- 05 94 பத்திரிகையின் மாணவர் அரங்கில் அலகு 1 தொடக்கம் அலகு 04 வரையிலான பாடப் பரப்பில் பல்தேர்வு வினாக்களிற்கு விடையளிக்கக் கூடிய வகையில் வழிகாட்டல் குறிப்புக்கள் (Guiding Notes) பிரசுரிக்கப்பட்டன. அதேநோக்கில் அலகு 5ற் குரிய பாடப்பரப்பில் பல்தேர்வு வினாக்கள், அமைப்புக்கட்டுரை, கட்டுரை வினாக்கள் என்பவற்றிற்கு இலகுவில் விடையளிக்கக் கூடிய வழிகாட்டல் குறிப்புக்கள் சிலவற்றை இக்கட்டுரையில் நோக்குவோம்.

### அலகு 5

### தாவர இராச்சியப் பிரிவுகளும், இனப்பெருக்கமும்
### (Diversity and Reproductiou in the Plant Kingdom)

அதிக எண்ணிக்கையான வினாக்கள் இவ் அலகினுள் இடம்பெறுகின்றன. பாடத்திட்டத்திற்குள் அடங்குகின்ற உயிரினங்களின் சிறப்பியல்புகள், கட்டமைப்பு, வகைகள், அவற்றினது வாழ்க்கைவட்டம் பொருளாதார முக்கியத்துவம் என்பவற்றை மையமாகக் கொண்டு வெவ்வேறு வடிவங்களில் வினாக்கள் அமைகின்றன.

### வைரஸ் (Virus)

பொதுவாக வைரஸ் பற்றிய வினாக்கள் பல்தேர்வு வினாக்களாகவே அமைகின்றன. இதனால் வைரசின் சிறப்பியல்புகள், வகைகள், உயிருள்ள உயிரற்ற தன்மை பற்றிய விடயங்கள் அதிகளவில் தெரிந்திருத்தல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில் கட்டுரை வினாக்களாக கேட்கப்படும்போது நுண்ணுயிரினவியலுடன் சேர்த்து நோயியல் தொடர்பாக கேட்கப்படுகின்றது

❋ 1. கலமற்ற ஒழுங்கு காணப்படுவதால் ஏனைய அங்கிகளிலிருந்து வேறுபடுதல்
2. அனைத்தும் கட்டுப்பட்ட ஒட்டுண்ணிகள் தொற்று நோய்களை விளைவிப்பன
3. புரத உறையையும் நியூக்கிளிக்கமிலஉள்ளீட்டையும் கொண்டிருத்தல் DNA அல்லது RNA காணப்படுதல் (DNAயும்RNAயும் சேர்த்து காணப்படுவதில்லை)
4. இலத்திரன் நுணுக்குக் காட்டிக்குரிய பருமனில் மிகச் சிறிய உயிரி- விருந்து வழங்கியினுள் மாத்திரம்பெருக்கத்தை காட்டுதல் விருந்து வழங்கிக்கு வெளியே பளிங்காகும் தன்மை (தொழிற்பாடு இழக்கப்படாமலே பளிங்காகுதல்
5. தொற்றும் திறன் இழக்கப்படாமலே புரதச் சூழியும் நியூக்கிளிக்கமில அகணியும் இழக்கப்பட்டு வழங்கியினுள் மீண்டும் உருவாக்கப் படுதல்
6. அனுசேப செயற்பாடுகள் அற்றிருத்தல் போன்ற சிறப்பியல்புகளை நன்றிந்திருத்தல் அவசியம்

❋ வைரசுகளை உயிருள்ளவைக்குரியன உயிரற்றவைக்குரியன எனும் எல்லைக்கோட்டில் வைத்து நியாயப்படுத்தும் தன்மை தெரிந்திருத்தல்

உதாரணம்:- இரட்டித்தல். நியூக்கிளிக்கமிலத்தை கொண்டிருத்தல், விகாரத்திற்குட்படுதல் போன்றவைஉயிருள்ளவைக்குரியன

பளிங்காகுதல், அனுசேப செயற்பாடுகள், வளர்ச்சி போன்றன உயிரற்றவைக்குரியன.

❋ பீஒக்சி இறைபோவைரஸ், Dioxy RiboVirus இறைபோவைரஸ் (Ribo Virus) பற்றீரியம் விழுங்கி Bacterio bhage) போன்றவைகள் தெரிந்திருத்தல்

❋ வைரசுக்கள் DNA RNA என்பவற்றை எளிய வடிவில் கொண்டிருப்பதால் பிறப்புரிமையியல் ஆராய்ச்சிகளில் பயன்படுத்தப்படுதல், தாவர, விலங்குகளில் தொற்றுநோய்களை ஏற்படுத்துதல்.போன்றவற்றில் அவற்றின் முக்கியத்துவம் பற்றி அறிந்திருத்தல் அவசியமாகும்

### மெய்பற்றீரியா:- (EuBacteria)

பற்றீரியாக்கள் சம்பந்தமாக ஒவ்வொரு வருடமும் வினாக்கள் பல்வேறு அடிப்படையின் கீழ் அமைகின்றன.

### A) பதியக்கல அமைப்பு:

பொதுமைப்பாடெய்திய பற்றீரியா பதியக் கலத்தில் காணப்படும் அமைப்புக்கள் - தொழில்தொடர்புகள் பற்றிய அறிவு அவசியமாகும்.

1. Procaryota கலஅமைப்பு/ கருஅற்ற கல அமைப்பு
2. கலச்சுவர் மியூகோ பெப்ரைட்/ கிளைக்கோ பெப்ரைட் சேர்வையினாலாக்கப்பட்டிருத்தல்.
3. கலமென்சவ்வு காணப்படுதல் - பொதுவாக தேர்ந்து புகவிடும் தன்மையை கொண்டிருக்கும். குறிப்பிட்ட சில வகை பற்றீரியாக்களில் வேறு தொழிலுக்கு சிறத்தலடைந்திருத்தல் பற்றி தெரிந்திருத்தல் அவசியமாகும்
4. சுயாதீன இறைபோசோம் காணப்படுதல்.
5. பிறப்புரிமையியல் பதார்த்தம்/ கோள DNA காணப்படுதல். (திட்டமான கருத்தோற்றம் அற்றிருத்தல்)
6. கலச்சுவருக்கு வெளியே வில்லையம்/ மெல்லிய சளியப்படை/ கவசம் காணப்படுதல்.
7. குழியவுருவில் ஒதுக்க உணவுகள் காணப்படுதல் (வொலுத்தீன்/ கிளைக்கோஜன்/ PHB)
8. நிறந்தாங்கிகள்/ ஒளித்தொகுப்பு நிறப்பொருட்களைக் கொண்ட மென்றகடுகள் காணப்படுதல்.
9. சவுக்குமுளை காணப்படுதல்
10. Mesosome (மீசோசோம்) காணப்படுதல்
11. Pili (கச்சம்) காணப்படுதல்

மேற் குறிப்பிட்ட அமைப்புக்கள் அனைத்தும் எல்லா பற்றீரியாக்களிலும் காணப்படுவதில்லை. ஆயினும் பொதுமைக்குரிய பதியக்கலத்தை கருத்திற்கெடுக்கும் போது இவற்றை குறிப்பிடுதல் அவசியமாகும்.

பல்தேர்வு வினாக்களில் இவ்வமைப்புக்கள் பற்றி பின்வருமாறு வினா அமைக்கப்படுகின்றது.

ஃ எல்லா வகை பற்றீரியாக்களிலும் காணப்படுவது
ஃ சில வகைக்குரிய பற்றீரியாக்களில் மாத்திரம் காணப்படுவது
ஃ ஒரு பொழுதும் பற்றீரியாக்களில் காணப்படாதது

DNA, கலச்சுவர், கலமென்சவ்வு, குழியவுரு, சுவாசநொதியங்கள், இறைபோசோம் போன்றன. எல்லா பற்றீரியாக்களிலும் காணப்படும் எனும் எண்ணக் கருவை கொண்டிருத்தல்.

இழைமணி, ER, கொல்கியுடல் பச்சையவுருமணி போன்ற மென்சவ்வுகளால் எல்லைப்படுத்தப்படுகின்ற அமைப்புக்கள் பற்றீரியாக்களில் காணப்படுவது இல்லை என அறிந்திருத்தல்.

வில்லையம், ஒளித்தொகுப்பு நிறப்பொருள், சவுக்குமுளை, Mesosome, Pili போன்றன சில வகைக்குரிய பற்றீரியாக்களில் மாத்திரமே காணப்படும் என்பதனை தெரிந்திருத்தல் அவசியமாகும்.

கட்டுரை, அமைப்புக்கட்டுரை வினாக்களில் ஏதாவதொரு இயூக்கரியோற்றா கலத்துடன் பற்றீரியாக்கலத்தை வேறுபடுத்துமாறு கேட்கப்படுகின்றது.

உதாரணம்:- 93 Aug கட்டுரை வினாவில் Bacteria கலத்தையும் Spirogyraவின் பதியக் கலத்தையும் வேறுபடுத்துமாறு கேடகப்பட்டிருந்தது.

இதன் பொழுது கல அளவு, புன்னங்கங்கள், ஒதுக்க உணவு, கலச்சுவர் கூறு, கருஅமைப்பு ஏனைய அமைப்புக்கள், சவுக்குமுளை உருவாக்கம் போன்றவற்றை அடிப்படையாக வைத்து விடையளித்தல் வேண்டும்.

ஃ Mesosomeஐ இடைமுகத்தம் என குறிப்பிடப்படுதல் தவிர்க்கப்படல் வேண்டும். 93 Aug புள்ளியிடும் திட்டத்தில் இடைமுகத்தம் என எழுதப்பட்டமைக்கு புள்ளிகள் வழங்கப்படவில்லை நேரடியாக Mesosome/ மீசோசோம் என எழுதுதல் வேண்டும்.


சுப்பிரமணியம் செல்வநேசன்
ஆசிரியர்
சென்பற்றிக்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்


### B) பற்றீரியாக்களின் போசனை

பல்வேறு வகைப்பட்ட போசனைத் தொடர்புகள் பற்றீரியாக்களில் காணப்படுவதால் அவற்றின் வகைகளையும், அவற்றிற்குரிய பிரதான உதாரணங்களையும் அறிந்திருத்தல் அவசியமாகும். அவ்வாறான வகைகளையும் பிரதான உதாரணங்கள் ஒரு சிலவற்றையும் அட்டவணையில் அவதானிப்போம்.

- போசனை
  - தற்போசனை
    - ஒளித்தொகுப்பு
    - இரசாயனதொகுப்பு
  - பிறபோசனை
    - அழுகல்வளரி
    - ஒட்டுண்ணி
    - ஒன்றியவாழ்வு

மேற்குறிப்பிட்டவற்றுள் கலப்புற நொதிகளை சுரக்கும் ஆற்றலுள்ள பற்றீரியாக்களை கொண்ட போசனைமுறை தெரிந்திருத்தல்

### C) பற்றீரியாக்களின் சுவாசம்

பாடத்திட்டத்திற்கேற்ற வகையில் சுவாசத்தை அடிப்படையாக வைத்து பற்றீரியாக்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது.

A) காற்றுவாழ் பற்றீரியா Eg: Azotobacter
B) காற்றின்றிவாழ் பற்றீரியா -Eg: Clostridium

(4ஆம் பக்கம் பார்க்க)

# 'மகாபொல' உதவித்தொகை அதிகரிக்கக்கோரி போராட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் ''மகாபொல'' உதவித் தொகையை அதிகரிக்கும்படி கோரி தென்னிலங்கை மாணவர்கள் சுவரொட்டிப் போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

தற்போதையசூழலில்மாணவர்களின் வாழ்க்கைச்செலவு அதிகரித்துச் செல்கின்றது என்றும் இதனால் தற்போதைய உதவித் தொகையை அதிகரிக்கும்படி தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

தற்போது வழங்கப்படும் தொகையை 1500 ரூபாவாக உயர்த்தும்படி கோரும் இம் மாணவர்கள் தமது கோரிக்கைக்கு சகல தரப்பினரதும் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இக் கோரிக்கைக்கு ஆதரவு சேர்க்கும் முகமாகவே சுவரொட்டிப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கொழும்பு நகரப் பகுதிகளிலும், தென்பகுதிப் பல்கலைக்கழக உட்புறப் பகுதிகளிலும் மகாபொல அதிகரிப்புக் கோரும் பெரிய அளவிலான சுவரொட்டிகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாகவும் எமக்கு கிடைக்கும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (க)

### மாநகரசபை உறுப்பினர் கொலை

## மாத்தளை மேயர் பொலிசாரால் விசாரணை

(கொழும்பு)

கடந்த மாதம் மாத்தளை நகர சபை உறுப்பினர் ஹுசையின் படுகொலை தொடர்பாக சி-ஐ-டி- பொலிசார் மாத்தளை நகர மேயர் அலுவிகாரவையும் விசாரித்தனர்.

இதுவரை மாநகர ஊழியர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இதேவேளை நகர மேயர் அலுவிகாரவை மிரட்ட பயன் படுத்தப்பட்ட மூன்று தொலைபேசி எண்கள் பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது-

### கொழும்பிலிருந்து

## வட-கிழக்கிற்கு சென்றோர் மீண்டும் பதிய வேண்டும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளிலிருந்து கொழும்புக்கு வந்து தற்காலிகமாக தங்கியிருப்போர் தமது பெயர் விபரங்களை பொலிசில் பதிந்துவிட்டு மீண்டும் தமது பிரதேசத்திற்கே சென்று சில காலம் தங்கியிருந்துவிட்டு தலைநகருக்கு திரும்பினால் புதிதாக பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யவேண்டும் என பாதுகாப்பின் அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க அறிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கிலிருந்துவந்து கொழும்பில் வசிப்பவர்கள் மீண்டும் ஒரு தடவை தங்களை பொலிசில் பதியவேண்டுமென கேட்கப்படுவதாக வெளியான செய்திகளில் உண்மை இல்லை கொழும்பில் வாடகைக்கு நிரந்தரமாக தங்கியிருப்போர் ஒரு தடவை பதிந்து கொண்டால் போதுமானது எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார் (86)

### சுகாதார நடவடிக்கை

சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட உணவகங்கள், தேனீர்சாலைகள், பேக்கறிகள் போன்ற இடங்களில் சுகாதாரத்தினைப் பேணுவதற்காக சாவகச்சேரி சுகாதாரப் பணிமனையும், நகர சபையும் இணைந்து நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளன (86)

## அடுத்த தேர்தல்களில் ஐ. தே. க. வெற்றியீட்டும்

### புதிய பொதுச் செயலாளர்

(கொழும்பு)

ஒரு இக்கட்டான நிலையில் கட்சி உள்ளபோதே கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை நான் பொறுப்பேற்றுள்ளேன். எனவே இவ் இக்கட்டான சூழ் நிலையில் கட்சியை கட்டியெழுப்புவதே எனது முக்கிய பணியாக இருக்கும் என புதிய ஐ தே.க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர தெரிவித்துள்ளார்

இரு தேர்தல்கள் நடைபெறவுள்ள சூழ்நிலையிலும் கட்சி ஒரு தேர்தலில் தோல்வியடைந்துள்ள நிலையிலுமே நான் கட்சியை கட்டியெழுப்ப வேண்டும். இதில் சகல தரப்பினரும் எனக்கு ஒத்துழைப்பு நல்குவார்கள் என நம்புகின்றேன்.

சுமார் ஆறுமாத காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல் இரண்டிலும் நிச்சயமாக கட்சி வெற்றியீட்டும் என்றும் கட்சித் தலைவர் ஜனாதிபதி டி பி விஜேதுங்காவின் வழி காட்டல் மூலமே இது நடக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்

ஒரு கட்சிக்குத் தலைவர்கள் வருவார்கள் போவார்கள் ஆனால் கட்சிக் கொள்கை மாறகூடாது- எனவே கட்சிக் கொள்கையே அடிப்படையானது- பிரேமதாசா ஜனாதிபதியாகஇருந்தபோது அவரின் கொள்கைகள் கடைப்பிடிக்கப் பட்டன- ஆனால் அவரின் கொள்கையினால் கட்சிமுழுமையாக இயங்கியது என்பது முற்றிலும் தவறான கருத்து என அவர் மேலும் தெரிவித்தார்-

## சவர்க்காரம் தருவிக்க அரச அதிபர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு தேவையான அளவு சவர்க்காரத்தைப் பெற்றுக்கொள்ள யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தற்சமயம் யாழ். மாவட்டத்தில் சவர்க்காரத்திற்கு ஓரளவு தட்டுப்பாடு நிலவி வருகின்றமை தெரிந்ததே.

இதனை அடுத்தே யாழ். அரச அதிபர் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக நமது நிருபரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அடுத்த தடவை எடுத்துவரப்படவுள்ள பொருள்களுடன் சவர்க்காரத்தையும் எடுத்துவர தாம் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார் (பா, தி)

## மருத்துவபீடத்திற்கு ஆய்வுகூட உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்குத்தேவையான ஆய்வுகூட உபகரணங்கள் உட்பட காகிதாதிகள் போன்ற பொருள்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்படவுள்ளன. சுமார் எட்டு லட்சம் ரூபா பெறுமதியான மேற்படி பொருள்கள் வடபகுதிக்கு அடுத்து வரும் கப்பல் மூலம் எடுத்துவரப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது (க)

மென்பான விற்பனையாளருக்கு

## வர்த்தக நிலையம் நெல்லியடியில் தீக்கிரை

### மூன்றுலட்சம்பெறுமதியானபொருள்கள்நாசம்

(வடமராட்சி)

நெல்லியடியில் பிரபல வர்த்தக நிலையம் ஒன்று தீக்கிரையானது. இவ் வர்த்தக நிலையம் முற்றாக எரிந்து சாம்பரானது

இக்கடையில் இருந்த அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பல நாசமாகின. மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட பொருள்கள் நாசமடைந்தன

இச்சம்பவம்நேற்றுக்காலை 5மணிக்கு பின்னர் நடைபெற்றது இவ்வர்த்தக நிலையத்துடன் இணைந்திருந்த களஞ்சிய அறையும் எரிந்ததில் சேதம் அதிகரித்திருந்தது ஜமுனா வர்த்தக நிலையமே இவ்வாறு எரிந்து சாம்பரானது, இதனையடுத்து இப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இத்தீவைப்பு சதிமுயற்சி என்றும் சொல்லப்படுகிறது.

பருத்தித்துறை காவல்துறையினர் இச்சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து புலன்விசாரணை செய்து வருகின்றனர்

இவ்வர்த்தக நிலையத்துடன் இருந்த மற்றும் இரு வர்த்தக நிலையங்களுக்கும்சேதம் ஏற்பட்டுள்ளது (யோ)

## ஹோட்டல் பாதுகாப்பு அமைச்சு அவகாசம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஹோட்டல்களுக்கு வருபவர்களுக்கு பூரணபாதுகாப்பு வழங்குவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உல்லாசப் பயணிகள் ஹோட்டல்களுக்கும் மற்றும் விடுதிகளுக்கும் ஜூன் மாதம் வரை சுற்றுலாத்துறை அமைச்சு அவகாசம் அளித்துள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளில் குண்டுகள் மற்றும் வெடி மருந்துகளைக் கண்டு பிடிக்கும் கருவிகளும் உபயோகிப்பதும் அடங்கும் சுற்றுலாத்துறை அமைச்சு அறிவித்த பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து சகல ஹோட்டல்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது அமைச்சுதெரிவித்தபாதுகாப்பு நடவடிக்கைகள் பேணப் படுகின்றனவா என்பதை அறிய அமைச்சு பின்னர் விசாரணைகள் மேற்கொள்ளும் (86)

## சந்தேக நபரை சுட்டவர் பொலிசாரால் கொலை

(கொழும்பு)

நீதிமன்றத்தில் ஆஜராக இருந்த கொலை குற்றச்சாட்டு சந்தேக நபர் ஒருவர் நீதிமன்ற வளவினுள் வைத்து சுடப்பட்டு காயமடைந்தார் அவரை சுட்டுவிட்டு தப்பியோட எத்தனித்த நபர் வீதி ரோந்து பொலிஸ் அதிகாரியின் துப்பாக்கிச்சூட்டுக்கு பலியானார். இச்சம்பவம் நீர்கொழும்பில் இடம் பெற்றது.

கொலைக் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயத்துடன் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர் அடையாளம் காணப்படவில்லை.

### தற்கொலை செய்த விவசாயிகள்

## இலங்கை வங்கியின் கடனை

# 6ஆவது ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி லெட்சுமி கதிர்காமத்தம்பி
### (மயில்வாகனம் ஏறாவூர்)

அன்னையின் மடியில்: **07 - 06 - 1950**

ஆண்டவனடியில்: **07 - 05 - 1988**

அன்புத்தாயே:-

சிரித்த நின்முகம் காண சிந்தை துடிக்குதம்மா
நீங்களில்லா உலகினிலே நிம்மதியில்லையம்மா
நீங்களின்றி ஆண்டுகள் ஆறு சென்றதம்மா
ஆனாலும் எம்நெஞ்சமதிலே வாழுகிறீர்களம்மா
உங்கள் குரல் கேட்டு மகிழ்ந்து நின்றோம் அன்று
உங்கள் குரல் மீட்டி மகிழ்கின்றோம் இன்று
பாதியிலே எம்மைவிட்டு பறந்து சென்றுவிட்டீர்களேயம்மா
உங்கள் நடை உடை பாவனையை எவரில் நாம்
கண்டாலும் அம்மா என்று எவரை நாம் அழைத்தாலும்
உங்கள் பாசமதை எவரிடமும் காண்வில்லையம்மா
உங்கள் பாசத்திற்கும் ஈடாகாதம்மா - தாயே
பாசத்தை இனி எங்களுக்கு காட்ட இங்கு யாருள்ளார்
சுயநலமுடைய மனிதர்களிடையே!

தாயே:

கண்ணிற்கு அழகாய் பாசத்திற்கு இனியவராய்
பண்பிற்கு உதாரணமானவராய் பவனிவந்த
உங்கள் வதனமது எம்மனதினுள் - என்றும்
கடலலைத்தொடரும் அலைகளாய் தொடர்ந்து
கொண்டே இருக்குமம்மா.

இல - 114/9, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (8227)

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கும்,
மகன், மகள், மருமகன், பேத்திமார்.


## ஒரு நற்செய்தி!!

தற்போது பின்வரும் இடங்களில் TASTY மென்பானங்களை நீங்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம்.

1. மாருதி ஸ்ரோஸ், கே. கே. எஸ். றோட், வல்வெட்டித்துறை.
2. வேலவன் ஸ்ரோஸ், பருத்தித்துறை.
3. சாயி கிருஷ்ணா, வதிரிச்சந்தி, நெல்லியடி.
4. முருகன் ஸ்ரோஸ், சிறுப்பிட்டி
5. அறிவகம், சாவகச்சேரி
6. சாந்தி ஸ்ரோஸ், கண்டி வீதி, பளை

(சி-9341)


## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கனகரத்தினம் ஜெகதீஸ்வரன்
### (ஜெகன்)

யாழ். பரியோவான் கல்லூரி மாணவன்

மலர்வு **27-11-1970**

மறைவு **09-5-1988**

எமது அன்புச் செல்வமே ஜெகன்
ஆசைமுகம் மறந்து ஆண்டு ஆறு போயும்
ஆறிடுமோ எங்கள் மனம்
பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
உன்சேவைகள் புகழிடம் பெற்றதையா
ஜெகதீஸ்வரன் என்ற அன்புப் புறாவே உனை
அந்த ஈஸ்வரன் தன்னிடம் அழைத்தானோ?
ஆண்டு ஆறும் அதற்குள் உதிர்ந்ததா?
மண்ணில் உன் நினைவோடு வாழும் நாமின்று
விண்ணில் உள்ள உந்தனுக்கு விருந்து படைக்கின்றோம்
மீண்டும் நீ வருவாயோ? என்று ஏங்குகின்றோம்
அன்புச் செல்வமே உன் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

அன்புடன்
(கனகரத்தினம், கலாவதி) பெற்றோர்
சசி அக்கா விஜி அக்கா
தம்பி பாலன், ஸ்ரீ மச்சான்,
கண்ணன் மச்சான்

இல 441 கண்டிவீதி,
அரியாலை
யாழ்ப்பாணம். (8188)

## பெற்றால் தப்பியிருப்பர்

வடமத்திய மாகாணத்தில் தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படும் 19 விவசாயிகளும் வட்டிக்கு பணம் கொடுக்கும் முதலாளிமார்களிடமிருந்து பெற்ற கடன்களை திருப்பி கொடுக்க முடியாமல் தற்கொலை செய்தனர் இலங்கை வங்கியிடமிருந்து விவசாய கடன்களை இவர்கள் பெற்றிருந்தால் இன்று இவர்கள் உயிருடன் இருந்திருப்பர் என இவ் விவசாயிகளின் மரணங்களுக்கான காரணம் பற்றி ஆராய்ந்த இலங்கை வங்கி பொது முகாமையாளர் தெரிவித்தார்.

முன்னதாக இவ்விவசாயிகள் இலங்கை வங்கியிடம் பெற்ற விவசாயக்கடனை மீளச்செலுத்த முடியாத நிலையிலேயே தற்கொலை செய்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### தாவரவியல்

C) அமையத்திற்கேற்ற காற்றின்றிவாழ் பற்றீரியா
Eg: Rhizobium

### D) பற்றீரியாக்களின் நைதரசன் பதித்தல்

வளிமண்டல நைதரசனை மண்ணில் பதித்து தாவரங்களுக்கு வழங்குவதற்கு (உயிரினவியலுக்குரிய பதித்தல்) புரோகரியோற்றாக்களில் சில முக்கியமானவையாக கருதப்படுகின்றது வினாக்களில் பற்றீரியாக்களுடன் சேர்த்து சயனோ பற்றீரியாவும் குறிப்பிடப்படுவதால் இங்கு இரண்டையும் ஒன்றாக சேர்த்து அவதானித்தல் சிறப்பானதாகும்

Azotobacter, Clostri Dium Rhizobium ஆகிய பற்றீரியாக்களும் AnApAenA Nostoc ஆகிய சயனோ பற்றீரியாக்களுமே பொதுவாக கேட்கப்படுகின்றன.

A) ஒன்றிய வாழ்வுக்குரிய நைதரசன் பதித்தல்
உதாரணம்:- Rhizobium, Anabaena, Nostoc

B) ஒன்றிய வாழ்வற்ற முறையில்/ சுயாதீன வாழ்வுக்குரிய முறையில் நைதரசன் பதித்தல்
உதாரணம்;- Azotobacter, Clostridium
Anabaena, Nostoc

மேற்குறிப்பிட்டவாறு போசனை, சுவாசம். நைதரசன் பதித்தல் என்பவற்றை ஒன்றிணைத்து வினாக்கள் பின்வருமாறு அமைக்கப்படுகின்றன.

உதாரணமாக;-

பண்படுத்தப்பட்ட நெல்வயலில் நைதரசன் பசளைகளின் தேவையை குறைக்கும் புரோகரியோற்றா எது? எனும் வினாவில் போசனை, சுவாசம், நைதரசன் பதிக்கும் தன்மை என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்டுள்ளது இவ்வாறான வினாக்களிற்கு நைதரசன் பதித்தலில் ஈடுபடும் பிரதான புரோகரியோற்றாக்களின் போசனை, சுவாசம் பதிக்கும் தன்மை என்பவற்றை மாணவர்கள் அறிந்திருத்தல் அவசியமாகின்றது.

- Azotobacter - அழுகல் வளரிக்குரிய கட்டுப்பட்ட காற்று வாழ் சுயாதீன/ ஒன்றிய வாழ்வற்ற நிலையில் நைதரசன் பதிக்கும்-
- Clostridium - அழுகல் வளரிக்குரிய கட்டுப்பட்ட காற்றின்றி வாழ் ஒன்றிய வாழ்வற்ற முறையில் நைதரசன் பதிக்கும்.
- Anabaena - Nostoc ) ஒளித்தொகுப்பு செய்கின்ற, கட்டுப்பட்ட காற்றுவாழ், ஒன்றிய வாழ்வாக அல்லது, ஒன்றி வாழ்வற்ற முறையில் நைதரசன் பதிக்கும்.
- Rhizobium- அமையத்திற்கேற்ற காற்றின்றிவாழ் ஒன்றிய வாழ்வின் மூலம் நைதரசன் பதிக்கும்.

### சிந்தனைக்கு

எவன் தன்னந் தனியாக தனித்து நிற்கின்றானோ அவனே உலகில் வலிமை மிகுந்தவன்,

- ஹென்றிக் இப்ஸென்.

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09-05-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண் - 05

## பொருண்மிய விடுதலை

கடந்த இரு தசாப்தத்திற்கு முன்னர் தேசிய இன விடுதலை என்பதை விட வர்க்க விடுதலை என்பதே முதன்மைப்படுத்தப்பட்டது. ஆனால் இன்றைய அரசியல் யதார்த்தம் வர்க்க விடுதலை என்பதைவிட தேசிய இனங்களின் விடுதலையே முதன்மையானது என்றும், அதுவே முனைப்பான பிரச்சினை என்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் ஒரு தேசிய இனத்தின் விடுதலை என்பது தனியாக அரசியல் விடுதலை என்பதில் முற்றுப் பெற்று விட முடியாது அது அவ்வினத்தின்! அரசின் பொருண்மிய விடுதலையுடனும் தொடர்புபட்டுள்ளது.

இதனையே வேளாண் மன்னர் விருது வழங்கும் வைபவத்தில் பேசிய தலைவர் பிரபாகரனும் சுட்டிக் காட்டியுள்ளார். ''எமது தன்னாட்சி உரிமைப் போராட்டம் தமிழீழத் தனியரசை நிறுவும் இலட்சியத்தைக் கொண்டது. இந்தத் தனியரசை நிர்மாணிப்பதற்கு ஒரு தன்னிறைவான பொருண்மிய கட்டமைப்பு அவசியம். எனவேதான் அரசியல் விடுதலை என்ற குறிக்கோளுடன் பொருளாதார விடுதலையும் ஒன்றிணைந்து நிற்கின்றது. நாம் நிர்மாணிக்கப் போகும் நாடு தங்கு நிலையற்றதாக தன் காலில் தரித்து நின்று வளர்ச்சி பெறக் கூடியதாக அமைய வேண்டும். அதற்கான அத்திவாரத்தை நாம் இப்பொழுதே கட்டி எழுப்ப வேண்டும்'' என்பதே தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டிய விடயம் ஆகும்'

மூன்றாம் உலக நாடுகளில்பெரும்பாலானவை நாற்பதுகளின் இறுதியிலும் ஐம்பதுகளினது ஆரம்பத்திலும் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை பெற்றுவிட்டன; அக்காலத்தில் சுதந்திரம் பெறாத ஆபிரிக்க நாடுகளும் அறுபதுகளின் மத்திக்கிடையில் 'சுதந்திரம்' பெற்றுவிட்டன. ஆனால் இவர்கள் பெற்ற சுதந்திரமானது எத்துணை நிறைவுடையது? இவர்களால் சுதந்திரம் பெற்று மூன்று, நான்கு தசாப்தங்கள் கடந்தும் எதையும் சுதந்திரமாகச் செய்ய முடிந்ததா? உண்மையில் இந் நாடுகள் பெற்ற சுதந்திரம் என்பது இந்நாடுகளில்

# எந்த ஓர் விடுதலைப் போராட்டமும் வெல்லும் என நிரூபித்த மண்டேலா

தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தலைவர், இந்த நூற்றாண்டின் மாபெரும் விடுதலைப் போராட்ட வீரர் நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாக பதவி ஏற்கும் நிகழ்ச்சியை மனக்கண் முன் கொண்டு வருகையில் தேகம் சிலிர்க்கின்றது. இந்நாளை தரிசிக்க தென்னாபிரிக்க நாடு ஒரு நூற்றாண்டு காலம் போராட வேண்டியிருந்தது. எந்த ஒரு விடுதலைப் போராட்டமும் வென்றே தீரும் என்பதை தனது சிறை அனுபவம் மூலம் நிரூபித்தவர் நெல்சன் மண்டேலா.

மண்டேலா அறிவித்திருக்கும் புதிய அரசில் அவருடன் சிறை சென்றவர்கள், உரிமை கோரி முன்னெடுத்துச் சென்றவர்கள் என பலருக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரிய அம்சம். இந்திய வம்சாவழி மக்களை சார்ந்த ஐந்துபேரை 17 பேர் கொண்ட தனது அமைச்சரவையில் இடம் பெறச்செய்துள்ளார். இதன் மூலம் தான் கறுப்பின நிறவெறியன் அல்ல என்பதையும் நிறவெறிகளையபாடுபடுபவர் யாராயினும் அவர்களுக்குரிய மதிப்பும் மரியாதையும் வழங்கப்படும் என்பதையும் மண்டேலா வெளிப்படுத்தியுள்ளார்.

வெள்ளையின தீவிர கம்யூனிசவாதி ஜோஸ்லோவை நெல்சன் மண்டேலா தமது அமைச்சரவையில் இணைத்திருப்பது மண்டேலாவின் கொள்கைத் தெளிவைக் காட்டுகிறது. தமது கட்சியை கடுமையாக எதிர்க்கும் சூலு இனத்தவர்களில் மூவரை மண்டேலா தனது புதிய அரசில் இணைத்து புதிய அமைச்சரவை நிறங்களை இனங்களை சமயங்களை கடந்த ஒன்றுஎன்பதை தெளிவுபடுத்தியுள்ளார். அமைச்சரவையில் ஒரேயொரு பெண் இடம் பெற்றுள்ளார். இது அதிகரிக்கப்பட்டிருக்கவேண்டும். மேலும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரான டோபோ பேகி(51)முதல் உதவி ஜனாதிபதியாகிறார். இதன் மூலம் மண்டேலாவிற்கு பின் ஜனாதிபதியாகவோ அல்லது கட்சியின் உயர் தலைவராகவோ இவர் இருப்பார் என்பதை மண்டேலா உறுதி செய்துள்ளார்.

இதே வேளை வெள்ளையின அரசுடன் கடுமையான பேச்சுவார்த்தை நடத்திய ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தற்போதைய பொதுச்செயலர் ரமோபோசோ அமைச்சராக்கப்படாமல் இருப்பது கேள்விகளை எழுப்பியுள்ளது ஏனெனில் வரும் நாட்களில் மண்டேலாவின் பின் யார் தலைவர் என்ற போட்டி நடக்கும் பட்சத்தில் டோபோவிற்கு உயர் பதவியும் ரமோபோவிற்குபதவியின்மையும்கட்சியில் குழப்பத்தையும் உண்டு பண்ணலாம். இதன் மூலம் மண்டேலாவின் பின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஒரே தலைமையின் கீழ் உறுதியாகசெயற்படுமா என்ற கேள்விகளை இது தோற்றுவித்துள்ளது.

நாட்டின் மொத்தம் 9 மாநிலங்களில் ஒரு மாநிலத்தில் வெள்ளையினத்தவரின் தேசிய கட்சி அரசு அமைக்கவிருப்பதும் கோசுலு பிராந்தியத்தில் இன்காட்டா கட்சி ஆட்சியை பிடித்திருப்பதும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் சந்தித்த ஆரம்பகால பின்னடைவுகள் பிற ஏழு மாநிலங்களிலும் தேசிய அளவிலும் அரசு அமைக்கும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் கறுப்பினத்தவர்கள் சுமந்து நிற்கும் கனவுகளை செயற்படுத்த தவறினால் 1999 இல் நடைபெறப் போகும் அடுத்த தேர்தலில் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தோல்வி கண்டாலும் ஆச்சரியப்படமுடியாது. எனவே இக் கட்சி கவனமாக செயற்பட வேண்டிய நிலை உள்ளது.

நெல்சன் மண்டேலா தலைமையிலான புதிய அரசுக்கு முன் குவிந்த பிரச்சினைகள் ஒன்று இரண்டல்ல ஏராளம். காலம் காலமாக நூற்றாண்டு நூற்றாண்டுகளாக வெள்ளையினவாதிகள் கறுப்பினத்தவர்களை அடிமைப்படுத்திய தால் தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் தற்போது கல்வியின்மை, அறியாமை வீடின்மை, நிலமின்மை, தொழிலின்றி, வறுமை, நோய், குக்கிராம வாழ்க்கை என்பவற்றை கொண்டுள்ளனர். வறுமைக் கோட்டின் கீழ் கறுப்பின மக்கள் அநேகர் உள்ளனர் எங்கிருந்தோ வந்து குடியேறிய வெள்ளையினத்தவர் நமது நாட்டில் சொகுசாக வாழ நமக்கு மட்டும் ஏனித்த நிலை என தென்னாபிரிக்க கறுப்பினம் கேட்பது நியாயம் எனவே வெள்ளையின மக்கள் போல் உணவு, உடை, உறையுள், சுகாதாரம் என பல துறைகளில் கறுப்பின மக்களின் நியாயமான சமூக நீதியுடன் கூடிய அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டிய மாபெரும் கடமையும் பணியும் மண்டேலாமுன் குவிந்துள்ளன. இந்த ஆசைகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் மண்டேலா அரசையே சேரும். வந்து குவியும் வெளிநாட்டுதவிகள், வெள்ளையின மக்கள் ஆதரவு, கறுப்பின மக்களின் ஒத்துழைப்பு, நாட்டில் அமையும் தேசிய அரசு என்ற நான்கு அம்சங்களையும் மண்டேலா சரியாக பயன்படுத்தி புதிய தென்னாபிரிக்காவை மலரச் செய்ய அவரால் முடியும் என நம்புவோம்.

கறுப்பின மக்களின் கனவுகள் காகினால் மண்டேலாவின் புதிய அரசு கறுப்பின மக்களாலேயே புறக்கணிக்கப்படும் என்பது உறுதி, விடுதலைப் போராட்டம் என்பது வேறு, நீதியான நிர்வாகம் சுபீட்சமான எதிர் காலத்தை உறுதி செய்யும் அரசு என்பது வேறு விடுதலைப் போராட்டத்தில் சாதனை படைத்த மண்டேலா தென்னாபிரிக்க அரச நிர்வாகத்திலும் சாதனை படைக்கட்டும்.

நன்றி;

வெரித்தாஸ்

## பாலஸ்தீன பொலிஸ்படை

(கெய்ரோ)

பாலஸ்தீனத்தின் புதியபொலிஸ்முதல்படையணி எகிப்துக்கும் காஸாபகுதிக்கும் இடையிலான எல்லையை நோக்கி கெய்ரோவிலிருந்து புறப்பட்டு சென்றுள்ளது

யேமனிலும், லிபியாவிலும் உள்ள பலஸ்தீன போராளிகள் 300 பேர் ரஃபா எல்லையை நோக்கி செல்வதாக தெரிவிக்கப்படுகிறது மற்றுமொரு தொகுதி பாலஸ்தீன பொலிஸ் அணி ஜோர்டானிலிருந்து ஜெரிக்கோ நகருக்கு பணிக்கு செல்லவுள்ளது

மேற்கு கரை காஸா பகுதிகளில் பாலஸ்தீன சுயாட்சி உருவாவதை அடுத்து இவர்கள் இங்கு கடமையாற்றவுள்ளனர்.

## புலிகளின் குரல்

### நிகழ்ச்சி நிரல்

1994-05-09 திங்கள் இரவு
8 01ற்கு - தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
8.20ற்கு - செய்திச்சரம்
8.30ற்கு - செய்திகள்
8. 40ற்கு - தரிசனம் நிகழ்ச்சியில் கவிஞர் முருகையன் அவர்களுடனான செவ்வி

1994-05-10 செவ்வாய் காலை
7 02ற்கு - மாவீரவணக்கம்
7.15ற்கு - இன்றைய தாரகை
7.30ற்கு - செய்திகள்
7.35ற்கு - பத்திரிகைச் செய்திகள்
7.40ற்கு - தாயகப் பாடல்கள்

சிறிலங்கா கடற்படையினரின்

## மீனவர் மீதான தாக்குதலை கண்டித்து தி. மு. க. ஆர்ப்பாட்டப் பேரணி

## காங்கிரசிலுள் மோதல் அ.தி.மு.க பின்னணியில்

### காங்கிரஸ் எம்.பி குற்றச்சாட்டு

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சி பிளவுபடுவதை தடுக்க கடும் நடவடிக்கை எடுக்க

சென்ற அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனார்த்தன் பூஜாரி முன்னி

நேரடியாக இருந்து ஆட்சிசெய்த அந்நியர்களைவெளியேற்றியதே ஒழிய இந் நாடுகளுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்கவில்லை. அதாவது ஆட்சியாளர்கள் மாறினார்களே ஒழிய சுதந்திரமான செயற்பாடுகள் இடம் பெறுவதற்கான சூழ்நிலை இருக்கவில்லை.

ஏனெனில் இந்நாடுகள் அரசியல்சுதந்திரம் போன்று பொருண்மிய ரீதியான சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை இந்நாடுகளின் பொருண்மியம் சுயசார்பு உடையதாக இல்லாது போனதே இதற்குக் காரணமாகும். இதனால் அந்நியர் வெளியேறிய பின்னரும் அவர்களிலேயே தங்கிநிற்க வேண்டிய அவல நிலை உருவானது. இதன் காரணமாக பொருண்மிய சுதந்திரம் மட்டுமல்லாமல் மறைமுகமாக அரசியற் சுதந்திரமும் கட்டுப்படுத்தப்பட்டது என்றே கூறமுடியும். இக்கட்டுப்பாடுகளைஇன்று ஏகாதிபத்திய அரசுகளும், வேறுசில தேவை கருதி அவர்களின் சார்பில் சர்வதேச நிதி நிறுவனங்களும் செய்து வருகின்றன.

இந்நிலையில் மூன்றாம் உலகநாடுகளின் விடுதலை என்பது இன்னமும் நிச்சயிக்கப்படாத தொன்றாகவும், பேச்சளவில் 'சுதந்திர நாடுகள்' என்ற ரீதியிலுமே உள்ளன. இந்நாடுகளின் 'கடிவாளங்கள்' மேற்குலக அரசுகளிடமும், சர்வதேச நிதி நிறுவனங்களிடமுமே இன்னமும் உள்ளன. இவற்றில் இருந்து இந்நாடுகள் விடுபடுதல் என்பது அண்மைக்காலத்தில் சாத்தியமாகப் போவதுமில்லை.

ஆனால் சர்வதேச வர்த்தகமும், போக்குவரத்தும் மிகவும் வளர்ச்சி கண்டுள்ள இன்றைய காலகட்டத்தில் தன்னிறைவான சுயசார்புப் பொருளாதார அமைப்பொன்று தேவைதானா என்ற கேள்வியைச் சிலர் கேட்பதுண்டு. ஆனால் இவ்வாறான கேள்வி ஓரிரு வளர்ச்சி அடைந்த நாடுகளை மனதில்வைத்துக் கேட்கப்படும் கேள்வியாக இருக்குமே ஒழிய மூன்றாம் உலகின்பொதுப் பண்பிற்குரிய கேள்வியாக இருக்க முடியாது. சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சியும், போக்குவரத்தின் அதிகரிப்பும் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக் கூடியவையாக இருக்க வேண்டுமே ஒழிய அந் நாடுகளை தங்கு நிலைப் பொருளாதாரத்திற்கு கொண்டுவந்து விடுவதாக இருக்கக்கூடாது.

அவ்வாறு இல்லாதுவிடில் 'அரசியல் சுதந்திரம்' பெற்றுவிட்டாலும் என்றும் கையேந்தும் நிலையிலேயே அரசுகள் இருக்க வேண்டும். இன்று விண்ணிற்கு 'ரொக்கட்டை' ஏவும் தொழில்நுட்பத்தையும் ஏவுகணை தொழில் நுட்பத்தையும் பெற்றுவிட்டபோதும் இந்தியா சுயசார்புப் பொருண்மியக் கட்டமைப்பு இன்மையாலேயே மேற்கு நாடுகளினதும், சர்வதேச நிதிநிறுவனங்களினதும் அழுத்தங்களுக்கு உள்ளாவதைத் தவிர்க்க முடியாது உள்ளமை இதற்கு சிறப்பாக சுட்டிக்காட்டக் கூடியதாகும்.

இந்நிலையில் உருவாகப் போகும் தமிழீழத் தனியரசும் இறைமையுடையதாக இருக்க வேண்டுமானால் அது தற்பொழுதே தனக்கென தன்னிறைவு கொண்ட சுயசார்புடைய பொருண்மியக் கட்டமைப்பைக்கொண்டதாக உருவாகவேண்டும். இதற்கு தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டது போன்று "இயற்கையின் கொடையாக எமக்கு வழங்கப்பட்ட வளங்களை நாம் இனங்கண்டு அவற்றை உச்சப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும்."

---

(சென்னை)

சிறிலங்கா கடற்படை இந்திய மீனவரை தாக்கும் சம்பவம் அதிகரித்து வருவதை எதிர்க்கும் முகமாக எதிர் வரும் 12ஆம் திகதி தமிழகம் எங்கும் ஆர்ப்பாட்டம் நடத்த தி.மு.க தீர்மானித்துள்ளது

சிலதினங்களுக்கு முன்னரும் இராமேஸ்வரம் அருகே இரு இந்திய மீனவர்கள்சிறிலங்கா கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களது சடலங்களையும் காயப்பட்ட மற்றுமொரு மீனவரையும் சிறிலங்கா கடற்படையினர் கொழும்புக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இவர்களது சடலங்களை எடுத்துச் சென்ற கடற்படை பின்னர் இந்திய கடலோரக் காவற்படையிடம் ஒப்படைத்தது கடந்த சனியன்றும் வேதாரணியம் அருகே மூன்று மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# விடுதலைப்புலிகள் விடயத்தில் தி. மு. க. இரட்டைவேடம் இல்லை

## கருணாநிதி மறுப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகள் விடயத்தில் தி மு க இரட்டை வேடம் போடுவதாக தமிழக அமைச்சர் எஸ் டி சோமசுந்தரம் கூறியதற்கு தி மு க தலைவர் கருணாநிதி மறுப்பு தெரிவித்துள்ளார் இது குறித்து அவர் செய்தியாளர்களிடையே பேசினார்

கேள்வி: புலிகள் விடயத்தில் தி மு க இரட்டை வேடம் போடுகிறது என அமைச்சர் எஸ் டி சோமசுந்தரம் பேரவையில் கூறியுள்ளாரே?

பதில்: 1990 ஒக்டோபர் 4 ஆம் திகதி ஆங்கில ஏடு ஒன்றிற்கு ஜெயலலிதா அளித்த பேட்டி ஒன்றில், கடந்த இரண்டு மாதமாக புகார் சொல்லக்கூடிய அளவு புலிகள் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை அவர்கள் சிங்கள அரசை எதிர்த்து போராடுவது மகத்தான செயலாகும் புலிகள் ஒழிக்கப்பட்டால் இலங்கையில் தமிழினமே அழிந்துவிடும் புலிகளின் வெற்றியே தமிழரின் வெற்றி கருணாநிதி புலிகளுக்குச் செய்யும் உதவி போதாது எம் ஜி ஆர் செய்த உதவிக்கு இது ஈடல்ல பிரபாகரனுக்கு ஒரு ஆபத்து ஏற்பட்டால் தமிழ்நாடு கொந்தளிக்கும் என வீராவேசமாக குறிப்பிட்டிருந்தார் அமைச்சர் எஸ் டியின் கூற்றுக்குப் பதிலாக இதை எமது உறுப்பினர் பரிதி இளம்வழுதி சபையில் கூறியிருக்கலாம். ஏன் கூறாதுவிட்டார் என்பது தெரியவில்லை. அன்று இப்படிபேட்டி கொடுத்த ஜெயலலிதா இப்போது புலிகளுக்கு தடையை நீடிக்க வேண்டுமென தீர்மானம் கொண்டு வருவதற்கு என்ன நிலை என்று பெயர்?

கேள்வி: தமிழக சட்டப் பேரவையில் விடுதலைப் புலிகள் தடையை நீடிக்க வேண்டுமென்று கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை தி மு க எதிர்க்கவில்லை என்று கூறி சட்டமன்றத்தில் உண்மையான தமிழ் உணர்வு கொண்டவர்கள் ஒருவர்கூட இல்லை என்பது வெட்கக்கேடானது என நெடுமாறன் கூறியுள்ளரே?

பதில்: அந்தத் தீர்மானம் விவாதிக்கப்படும் போது தி. மு க. உறுப்பினர் பரிதி இளம்வழுதி தீர்மானம் தேவையில்லை என பேசினார். கருத்து சொல்ல உங்களுக்கு துணிவுஇல்லை என்று முதலமைச்சர் குறுக்கிட்ட போதுகூட, இல்லாத அமைப்பிற்கு தடை விதிக்கக்கோரும் தீர்மானம்தேவையில்லை என அவர் திட்டவட்டமாகக் கூறினார். அதையொட்டி அவர் அளித்த விளக்கங்களை சபை குறிப்பேட்டிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவித்ததும் அதைக் கண்டித்து இளம்வழுதி வெளிநடப்புச் செய்தார்.

---

# தமிழக அரசின் கோரிக்கை மத்திய அரசு ஏற்கும்

## விடுதலைப் புலிகள் தடை குறித்து சவான்

(டில்லி)

விடுதலைப் புலிகளுக்கு தடையை நீடிக்க வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை ஏற்போம் என மத்திய உள்துறை அமைச்சர் சவான் தெரிவித்துள்ளார்.

இராஜ்யசபாவில் அ.தி.மு.க உறுப்பினர் ஜி.சுவாமிநாதன் இது குறித்த பிரச்சினையை கிளப்பினார். இதற்கு பதிலளித்த மத்திய அமைச்சர் எஸ் பி சவான் விடுதலைப் புலிகளுக்கு தடைவிதிப்பது குறித்து தமிழக சட்டசபையில் அ தி மு க உறுப்பினர்கள் சிலர் மத்திய அரசை குறை கூறி பேசியுள்ளனர். இப்படி பேசியிருப்பது வேதனை அளிக்கின்றது. தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு கவனிக்கவில்லை என்பது சரியல்ல எனினும் தமிழக அரசு இதற்கான ஆதாரங்களை மத்திய அரசிடம் தாக்கல் செய்ய வேண்டும். விடுதலைப்புலிகளுக்கான தடையை நீடிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்வதில் எந்த பிரச்சினையும் இல்லை, எனினும் இந்த பிரச்சினை நடுவர் மன்றத்திற்கு விடப்படும். அதன் கருத்துப்படி தகுந்த ஏற்பாடு செய்யப்படும் என அமைச்சர் சவான் தெரிவித்தார்.

---

கக்கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் நரசிம்மராவுக்கு வைஜயந்திமாலா எம்,பி கோரிக்கை விடுத்துள்ளார். தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சியில் ஒழுங்கும் கட்டுப்பாடும் சீர் குலைந்து விட்டது. சென்னையில் உள்ள இந்திரா காங்கிரஸ் அலுவலகத்தில் மத்திய அமைச்சர் தங்கபாலுவின் ஆதரவாளர்களுக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வ ழப்பாடி இராமமூர்த்தியின் ஆதரவாளர்களுக்கும் இடையில் கடும்மோதல் நடந்து வருகிறது.

புதிய நிர்வாகிகளை தெரிவது தொடர்பாக கருத்தறிய ஜனார்த்தன பூஜாரி முன்னிலையில் இந்த சம்பவம் நந்துள்ளது. தமிழ்நாடு காங்கிரஸ் பிளவுபடுவதை தடுக்க நரசிம்மராவ் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு காங்கிரஸ் குழப்பத்தின் பின்னணியில் அ தி மு.க உள்ளது. முதலமைச்சர் ஜெயலலிதாவை மத்திய அமைச்சர் தங்கபாலு ஆதரிக்கின்றார். ஆறு அல்லது ஏழு காங்கிரஸ் எம்.எல்.ஏ க்களை அ.திமு.க தனக்கு சாதகமாக வைத்துக் கொண்டு செயற்படுவதாக தெரிகிறது என வைஜயந்திமாலா எம்.பி தெரிவித்தார்.

---

# நாஸி அதிகாரியை நாடுகடத்த கோரிக்கை

முன்னாள் ஜேர்மன் நாஸி படை அதிகாரி ஒருவரை தம்மிடம் ஒப்படைக்குமாறு இத்தாலிய அரசு ஆர்ஜண்டீனாவைக் கோரியுள்ளது இந்த நாஸி படை அதிகாரி இரண்டாம் உலகப் போரின் போது முந்நூறுக்கும் மேற்பட்ட இத்தாலியர்களை ரோமிற்கு அருகில் வைத்து படுகொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது

எரித்பிரிட்கேக் என்ற இந்த நாஸி அதிகாரி பேட்டி ஒன்றில் இக் கொலைகளை தாம் மேலிடத்தின் உத்தரவின் பேரிலேயே கடமையின் பொருட்டு புரிந்ததாக கூறினார். 335 இத்தாலியர்கள் 1944ஆம் ஆண்டு நாஸி படைகளால் சுற்றிவளைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர் 32 ஜேர்மனிய படைகள் கெரில்லாப் படையினரால் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் முகமாக இப் படுகொலை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது

---

# தொலைக்காட்சியினால் குழந்தை மனம் பாதிப்பு

## இந்திய நிபுணர்கள் கருத்து

அளவுக்கதிகமாக தொலைக்காட்சி பார்ப்பதால் குழந்தைகளிடையே தவறான மனப்போக்கு உருவாகி ஆக்கிரமிப்பு குணம் வலுவடைகிறது. இதனால் வலிப்பு நோய் கூட தாக்கக் கூடும் என இந்திய கல்வியாளர்களும் குழந்தை நோய் மருத்துவர்களும் குழந்தை நலன் காப்பவர்களும் கருத்து தெரிவித்துள்ளனர்.

புதுடில்லியில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் பங்குபற்றிய அவர்கள் தொலைக்காட்சியை பார்க்கும் பழக்கத்தை குழந்தைகள் குறைத்துக் கொள்வதற்காக பெற்றோர்கள் குழந்தைகளிடம் அதிக நேரம் செலவிட்டு அன்பு காட்டவேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

நேரு பாலசமிதியும் இந்திய குழந்தை நோய் மருத்துவ அகடமியும் இக்கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தன.

புதுடில்லி சப்தஜன் மருத்துவமனையில் கடந்த ஆண்டில் தொலைக்காட்சி அதிகமாக பார்க்கும் பழக்கமுடைய குழந்தைகளைவைத் ஆராய்ச்சி செய்ததில் அவர்களில் 70 சதவீதமானோர் வன்முறை ஆக்கிரமிப்பு குணங்களுடன் காணப்பட்டதாக அம்மருத்துவமனையின் குழந்தை நோய் மருத்துவ நிபுணர் குறிப்பிட்டார்.

**இலங்கைத் தமிழரின் தொலைக்காட்சி**

# ஜேர்மனியில் ஒளிபரப்பு ஆரம்பம் தடுக்கும் முயற்சியில் சிறிலங்கா

(கொழும்பு)

மேற்கு ஜேர்மனியில் வசிக்கும் இலங்கையரான ரீ. செல்வநாயகம் என்பவர் தனியான தொலைக்காட்சி ஒளிபரப்புச்சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளார். இதற்கான அனுமதியை பேர்லின் நகர அதிகாரிகள் வழங்கியுள்ளனர்.

இத்தகவல் சிறிலங்கா அரசுக்கு அறிவிக்கப்பட்டதும் வெளிவிவகார அமைச்சு மேல் நடவடிக்கை எடுப்பதற்காக வெளியுறவு அமைச்சின் செயலாளரை ஜேர்மனிக்கு அனுப்பியுள்ளது. இது தொடர்பாக வெளியுறவு அமைச்சு வெளியிட்ட தகவலில், பேர்லினில் இலங்கை வம்சாவளியினரான செல்வநாயகம் என்பவருக்கு தனியான தொலைக்காட்சி அலைவரிசையை இயக்க பேர்லின் அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளதாயும் கலாசாரம் மற்றும் பொழுது போக்கு விடயங்களுக்கு இந்த அலைவரிசை பயன்படுத்தப்படும் என சிறிலங்கா வெளியுறவு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டது.

இத்தகவல் கிடைத்ததும் இவ்விடயம் தொடர்பாக சிறிலங்காவிற்கும் ஜேர்மனிக்கும் இடையிலான நட்புறவின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாட பொன் நகருக்குச் செல்லுமாறு வெளிவிவகார செயலாளர் பேர்னாட் திலகரட்னவை அமைச்சர் ஹமீட் அனுப்பியுள்ளார்.

## ஆசிரியர் நியமனம்

(நல்லூர்)

வலயம் இரண்டு பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் நியமனம் தொடர்பான பெயர்ப் பட்டியல் விண்ணப்பதாரரின் பார்வைக்காக வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பெயர்ப்பட்டியலை சண்டிலிப்பாய், உடுவில், கரவெட்டி மற்றும் பருத்தித்துறை ஆகிய கோட்டக் கல்வி அலுவலகங்களில் பார்வையிடலாம் என்று வலயம் இரண்டு பணிப்பாளர் திரு. கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# உயர் அரச அதிகாரிகள் பலர் பதவி நீக்கம் செய்யப்படலாம்

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பல உயர் அரச அதிகாரிகளைப் பதவியிலிருந்து நீக்கவிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தமாற்றம் மூன்று, நான்கு கிழமைகளுக்குள் நடைமுறைப் படுத்தப்படும் என்று தெரியவருகிறது. இந்த வருடம் நவம்பரில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு முன் அவர் தனக்குச் சாதகமான ஒரு சூழலை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

கலாநிதி காமினி விஜேசேகராவைக் கட்சியின் செயலாளராக நியமித்து யு. என். பியையும் தனது முழுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளார். ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்தின் தலைவர் சுனில் றொட்றிக்கோ மற்றும் சண்டே ஒப்சோவர், டெய்லி ஒப்சோவர் ஆசிரியர் ராஜினாமாவும் அரசுக்குச் சொந்தமான பத்திரிகைகளும் ஜனாதிபதியின் அதிகாரத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

உயர் அதிகாரிகளை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பதவி நீக்கம் செய்யும் முன் அதிகாரிகள் தாமாகவே பதவியிலிருந்து விலகிக்கொள்ள உள்ளார்கள்.

ஊழல்களில் ஈடுபட்ட அதிகாரிகளையும் பதவிவிலக்கும்படி ஜனாதிபதி பணித்துள்ளதாகத் தெரியவருகிறது, அப்படிச் செய்வதன் மூலம் பொதுமக்களின் ஆதரவு யு. என். பியின் பக்கம் திரும்பும் என்று அவர் எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இரு இளம் பெண்கள் அசிட் அருந்தி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

இரு இளம் பெண்கள் நேற்று அசிட் அருந்தி தற்கொலை செய்துகொண்டுள்ளனர் இவர்கள் இருவரும் உறவினர் எனவும் தெரிய வருகின்றது.

தனலட்சுமி - மாரிமுத்து ஆச்சாரி (18 வயது, 164 நாவலர் வீதி, யாழ்) இசைக்கி ஆச்சாரி (18 வயது, 74, யாழ் இந்துக்கல்லூரி ஒழுங்கை) ஆகிய இரு இளம் பெண்களுமே தற்கொலை செய்துகொண்டவர்களாவர்.

இவ் இரு இளம் பெண்களும் அசிட் அருந்தி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்கள் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் இத் தற்கொலைக்கு குடும்பப்பிரச்சினை காரணமாக இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டது (பா)

# காலி துறைமுகத்தில் இரு தமிழர் கைது

(கொழும்பு)

காலிதுறைமுகத்துக்குச் சீமெந்து எடுத்துச் சென்ற கப்பலில் பிரயாணம் செய்த இரு தமிழ் இளைஞர்கள் துறைமுகப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். இவ்விருவரும் பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கப்பலை விட்டு இறங்கி துறைமுகத்தில் நடமாடிய போதே இவர்கள் கைதாகினர் எனவும் சீமெந்து இறக்கப்பட்டதும் இவர்கள் திருப்பி அனுப்பிவைக்கப்படுவர் என துறைமுக பொலிசார் தெரிவித்தனர்.

**அகதிகளின்**

அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியா சென்ற புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுக் குழு இந்திய உள்துறை அமைச்சு அதிகாரிகள் தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகளுக்கு பொறுப்பான உயரதிகாரிகளை சந்தித்துப் பேசியது படகுகள் மூலம் சென்ற அகதிகள் பின்னர் கப்பலில் திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த அகதிகளின் 107 படகுகளும் திருமலை, முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த அகதிகளின் 70 படகுகளும் இந்திய அரசால் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் கள்ளக் கடத்தல் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடாத படகுகள் விரைவில் சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஏனைய படகுகள் தொடர்பாக முடிவுஏதும்

# தந்தையின் பாதையை பின்பற்றினால் ஐ. தே. க விற்கு ஆதரவு நல்குவோம்

## - பிரேமதாசாவின் மகன் சஜீத்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் தனது தந்தையாரின் பாதையைப் பின்பற்றி அவரால் முன்னெடுக்கப்பட்ட சகல திட்டங்களையும் தொடருமானால் தமது குடும்பத்தின் ஆதரவு ஐ. தே. கவுக்கு இருக்கும் என முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகன் சஜீத் பிரேமதாசா கூறியுள்ளார்.

சென்னையிலிருந்து வெளியாகும் 'இந்து' ஆங்கிலப் பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள பேட்டியிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் நீங்கள் பெரும் பங்கு வகிக்கும் சாத்தியம் இருக்கிறதா என்று சஜீத் பிரேமதாசாவிடம் கேட்கப்பட்டபோது, பத்திரிகைகள் வெறும் ஊகங்களையும் வதந்திகளையுமே வெளியிடுகின்றன. எமது குடும்பத்தைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைப் பீடத்திலிருந்து உத்தியோகபூர்வமான வார்த்தை எதுவும் வரவில்லை இதுகுறித்துத் தீர்மானிப்பது அவர்களைப் பொறுத்தது எனப் பதிலளித்தார்.

எனது தந்தையாரின் கொள்கைகளைப் பின்பற்றி அவரது சகல செயல்திட்டங்களையும் முன்னெடுக்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் விரும்பினால் தான் எமது ஆதரவு அவர்களுக்கு இருக்கிறது எனக் கூறிய சஜீத் பிரேமதாசாவிடம், உங்கள் தந்தையாரின் அரசியல் விரோதியான காமினி திசநாயக்காவுடனும் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியில் பாடுபட முடியுமா எனக் கேட்டபோது, எனக்கு தனி நபர்களைப்பற்றிப் பிரச்சினை இல்லை. கொள்கைகள் தான் முக்கியமானவை என பதிலளித்தார்.

**வடபகுதி**

களின் ஒரு பகுதிக்கு மட்டும் அனுமதி வழங்குகிறது. அனேகமான பொருள்களுக்கு முற்றாகவே அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது அனேகமான சந்தர்ப்பங்களில் அனுமதி வழங்குவதற்கு நீண்ட காலதாமதம் ஏற்படுவதாகவும்தெரியவருகிறது. (க),(தி)

# சவூதியில் பணிப்பெண் தூதரகத்தில் தஞ்சம்

## எஜமானியால் தாக்கப்பட்டாராம்

சவூதி அரேபியாவில் வீட்டுப் பணிப் பெண்ணாக தொழில் புரிந்த கொம்பனித் தெருவைச் சேர்ந்த திருமதி ஏ. டி சுவர்ணலதா என்பவர் அங்கு வீட்டு எஜமானியினால் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்றுதொடர்பாக தூதரகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சவூதி றியாட்டில் பணிப் பெண்ணாக தொழில் புரிந்து வரும் இவர் வீட்டுக்கார எஜமனியால் தாக்கப்பட்டுள்ளார். இதனால் வீட்டை விட்டு ஓடிய இவர் தூதரகத்திலேயே தங்கியுள்ளார் இவர் அங்கு தொடர்ந்து பணியாற்ற விரும்பவில்லை எனக் கூறியதையடுத்து அவரை தாயகம் திருப்பியனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**கடற்படையினரால்**

சேர்ந்தவரான அன்னராசா-ஜெயச்செல்வம் (வயது 21) என்பவர் கடலில் குதித்து உதவியுடன் கரையை வந்து சேர்ந்தார்.

இவர் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதி

**கத்தோலிக்க**

வும் தெரிய வருகின்றது.

இதேவேளை மேற்படி கவ

# தென்னா. பாராளுமன்றம் இன்று கூடுகின்றது

(ஜோகர்ணர்ஸ்பேக்)

தென்னாபிரிக்காவின் நீண்ட காலவரலாற்றில்முதல் முறையாக இனப்பாகுபாட

கிறார்- இவரது தலைமையில் உயர்நிலைக்குழு ஒன்று முதல் முறையாக ஜனநாயகத் தென்னாபிரிக்காவிற்குசெல்லவுள்ளது-

# 1980 ஜூலை வேலை நிறுத்தம்

இதேவேளை மேற்படி சுவ ரொட்டிகள் பொலிசாரினால் அகற்றப்பட்டு வருவதாகவும் இதனைத் தொடர்ந்து கற்பாறைகள மீது வண்ணங்களினால் எழுதப்படுவதாகவும் மேலும் தெரியவருகின்றது. (நி, க)

## திருமலை

தினருடன் திடீர் மோதல் ஒன்று இடம்பெற்றது.

இம் மோதலின்போது இராணுவ தரப்பின் சேத விபரங்கள் தெரிய வரவில்லை விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத் தாக்குதலின்போது புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்கள் வருமாறு;

| | |
|---|---|
| ஃ நடுத்தர ரவைகள் | —70 |
| ஃ ஆர். பி ஜி. புறப்ளர் | —01 |
| ஃ கெல்மெட் | —02 |
| ஃ மழைக் கவசம் | —01 |
| ஃ கிட்பாக் | —01 |
| ஃ மில்ரி பெலிட் | —01 |

# வேலையிழந்தோருக்கு இழப்பீடும், சம்பளமும்

(கொழும்பு)

1980 ஆம் ஆண்டு ஜூலை வேலைநிறுத்தத்தால் வேலையை இழந்த மற்றுமொரு தொழிலாளர் குழுவினருக்கு இழப்பீடும் சம்பள நிலுவைப் பணமும் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட தேசிய புடவைத் தொழில் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள், இழப்பீட்டையும் சம்பளநிலுவைப்பணத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

சுமார் 650 தொழிலாளருக்கு இவ்வாறு இழப்பீடும் சம்பள நிலுவைப் பணமும் வழங்கப்பட்டது.

# சிறிலங்கா - தெ. ஆபிரிக்கா இராஜதந்திர உறவு

(கொழும்பு)

தென்னாபிரிக்காவுடன் சிறிலங்கா இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியுள்ளது. நைரோபியில் உள்ள சிறிலங்கா தூதுவர் சிகுராஜபதி தென்னாபிரிக்காவின் தூதுவராகவும் நியமிக்கப்படவுள்ளார். இதற்கான ஏற்பாடுகளை வெளியுறவு அமைச்சு செய்துள்ளது,

சிங்கப்பூரில் உள்ள தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் சிறிலங்காவிற்கான தூதுவராகவும் நியமிக்கப்படவுள்ளார் இதேவேளை தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாக நாளை செவ்வாய் பதவி ஏற்கவுள்ள நெல்சன் மண்டேலாவின் பதவி ஏற்பு நிகழ்வில் சிறிலங்கா ஜனாதிபதியின் சார்பில் வெளியுறவு அமைச்சர் ஹமீட் கலந்து கொள்கிறார்.

எடுக்கப்படவில்லை

## இனப்பிரச்சினை

தமது தலைவர்களுக்கு நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டும் என இந்தக் குழு விரும்புகிறது

அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடக் கொழும்பில் தமிழ் வேட்பாளர்களை நிறுத்தவும் இந்தக் குழு திட்டம் ஒன்றை ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஜனாதிபதி டி பி. விஜேதுங்கா தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் உணர்வுகளைக் குறைவாக மதித்துப் பேசிவருவது இரு சமுதாயத்தினருக்கும் மனவருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் போது பிரதான கட்சிகள் சிறுபான்மையினரின் வாக்குகளை இலேசாகப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதைத் தமிழர்கள் செயற்பாட்டுக் குழு கோடி காட்டியிருக்கிறது.

இவ்வாறு கொழும்பு பி பி, ஸி நிருபர் ஜோர்ஜ் ஆர்னியின் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

யில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்

கட்டுமரத்தில் தொழிலுக்குச் சென்ற இவரை கடற்படையினர் வேட்டுக்களை ஏவியவாறு வளைத்துப் பிடித்ததாக தெரிய வருகிறது இது சம்பந்தமாக மேல்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (யோ)

## ஹந்தான

இந்த மலையுச்சியில் தொலைக் காட்சிக்கோபுரமும் தொலைபேசிக் கோபுரமும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமோனியா

கையினால் தமிழ்ப் பிரதேச நிலங்கள் வளமற்றதாக ஆக்கப்படுகின்றன என மேலும் கூறப்பட்டது. (தி)

## தமிழ்

மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகவும் பெரியார் மாவட்டத்தில் உள்ள முகாம்களில் உள்ளவர்கள் கலக்டரிடம் முறையிட்டுள்ளனர்.

திருப்பி அனுப்பப்பட்டவர்கள் எழுதும் கடிதங்களும் ஊக்குவிப்பதாக இல்லை வவுனியாவில் உள்ள முகாமில் இப்போது தங்கவைக்கப் பட்டிருக்கும் அகதி ஒருவர், பவானி சடாக் முகாமில் வாழும் தனது உறவினர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் தானும் தன்னுடன் வந்தவர்களும் இன்னமும் முகாம்களில் வாழ்வதாகவும், தமது காணி பூமிகளையோ வீட்டையோ சென்று பார்க்கமுடியவில்லை என்றும், பொருள்களின் விலை எக்கச்சக்கமாக அதிகரித்திருப்பதாகவும், வாழ்க்கை தமிழ் நாட்டு முகாம்களைவிடக் கடினம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நாட்டின் ஆளும் கட்சியான அனைத்து இந்திய அ- தி- மு- க- தவிர மற்றக் கட்சிகள் அனைத்தும் இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதை எதிர்க்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

...பாடற்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் முதற்கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இனப்பாகுபாடற்ற முறையில் தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிபராக நெல்சன் மண்டேலா நாளை பதவியேற்கவுள்ளார். இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சியில் ஐ. நா, தலைமைச் செயலர் உட்பட பல வெளிநாட்டு பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்

இந்தியாவின் சார்பில் குடியரசு துணைத் தலைவர் திரு நாராயணன் கலந்து கொள்வுள்ளது-

இதேவேளை ராஜீவ் காந்தி அறக் சட்டளையின் தலைவர் திருமதி சோனியா காந்தியை டாக்டர் நெல்சன் மண்டேலா தனது பதவி ஏற்பு வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு சிறப்பு அழைப்பு விடுத்துள்ளார்-

இதே வேளை தென்னாபிரிக்காவின் மிகப் பெரிய மாகாணத்தின் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நேற்று முன்தினம் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள். இவர்கள் ஆறு மொழிகளில் பதவிப் பிரமாணம் எடுத்தார்கள். 8 மாகாணங்களில் புதிய சட்டமன்றங்களின் முதல் கூட்டங்கள் நடைபெற்றன, இந்த மாகாணங்களின் பிரதமர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், இந்த தேர்தல்களில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் 62 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளதாக தெரிகின்றது,

## விபத்தில்

(வயது 27) சிவகுமார் (வயது 22) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்- இருவரும் அவசர சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போது ஜெகேந்திரன் அங்கு மரணமானார்- (ச, நி)

# இராணுவ நடவடிக்கையால் மடு அகதிமுகாம் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா - மன்னார் வீதியில் சிறிலங்கா இராணுவத்தின் இராணுவ நடவடிக்கையினால் மடு திருப்பதி அகதி முகாமிற்கான உணவு - மருத்துவப் பொருள்கள் எடுத்துச் செல்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக வவுனியவிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன:

பொது நிறுவனங்களினால் வவுனியா நகரிலிருந்து மன்னார் வீதி ஊடாக லொறிகளில் இப் பொருள்கள் எடுத்து வரப்படுவது வழமை.

சமீபத்தில் இடம்பெற்ற 'ஜயமகா' இராணுவ நடவடிக்கையை அடுத்து இந்த வீதி பொது நிறுவனங்கள் பாவனைக்கு உட்படுத்துவதில் இராணுவம் பல சிரமங்களை ஏற்படுத்தி வருவதாக தெரியவருகிறது.

இதன் காரணமாக மடு திருப்பதி அகதி முகாமில் உள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுக்கு உரிய காலத்தில் நிவாரணப் பொருள்கள் கிடைப்பதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் மருத்துவப் பொருள்கள் கிடைப்பதில் இடையூறு ஏற்பட்டுள்ளன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான அகதி மக்கள் அவலப்பட நேர்ந்துள்ளது என மேலும் அறியப்பட்டது. (தி)


**வடமராட்சி மக்களே!**

உங்கள் போட்டோஸ்ரற் தேவைகளுக்கு நாடுங்கள்

**கனன் போட்டோ கொப்பியிங் சேர்விஸ்**

பருத்தித்துறை.

(8236)



**யாழ் ஸ்ரீதரில்...**

தினசரி மாலை 4, 6 மணி
சனி, ஞாயிறு காலை 10, 30
மாலை 4, 6 மணி

**காற்றுவெளி**

(சி-9370)


## மரண அறிவித்தல்

### திரு. வே. சுந்தரலிங்கம்

திரு வே. சுந்தரலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர் டிறிபேக் கல்லூரி) காலமாகிவிட்டார். இவர் சு யோகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக்கணவரும், நந்தக்குமார் (பிரத்தியேக ஆசிரியர்), உதயக்குமார் (கனடா), சுந்தரக்குமார் (பிரதம பொறியியலாளர் - நிருமாணத் திணைக்களம்- யாழ்), மாலதி (மிருகவைத்தியர் - வவுனியா), சுகந்தி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நவரஞ்சிதமலர், சரோஜினி, ஜயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்சயன், கீர்த்தனா, தீபனா, நேதாஜி, பிருதுவி ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

அரசினர் வைத்தியசாலை
முன்பாக,
சாவகச்சேரி.

தகவல்:
திருமதி சு. யோகேஸ்வரி
(மனைவி)

(8237)


# வெகுவிரைவில்... மண்ணுக்காக

(இ)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.